962

ஸ்ரீ பர்வத வர்த்தனி

962
2-11

ஆசிரியர் : V. M. நடேச நாட்டார்

மலர் 2 | ஹேவிளம்பி கார்த்திகைத் திங்கள் நவம்பர் 1957 | இதழ் 3

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 - DEC 1957
MADRAS

	பொருளடக்கம்		பக்கம்
1.	மீன் இலாகா கவனிக்க	...	65
2.	மீனவர் கூட்டுறவு சங்க மகாநாடு	...	69
3.	வைத்தியம்	...	71
4.	தேயும் நிலவு !	...	73
5.	'குழலிக்கு'	...	77
6.	கடமையும் காதலும்	...	80
7.	கவிதை உள்ளம்	...	84
8.	யார் பெற்ற செல்வம்	...	87
9.	திருக்குறள்	...	91
10.	தூதுகோஷ்டி	....	93
11.	இன்ப வாழ்க்கை	...	94
12.	ஏனோ இச்சமூகம்	....	95

சென்னை ராஜ்ய
...தராஜகுல சங்க
...மாத வெளியீடு

நம... விலை அணா 4

I
211, N56S
N57.2.3
187258

உ

பராசக்தி துணை

"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் அம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு"

பர்வத வர்த்தனி

"எல்லாரு மின்புற் றிருக்க நினைப்பதுவே
யல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே".

மலர் 2	ஹேவிளம்பி கார்த்திகைத் திங்கள் நவம்பர் 1957	இதழ் 3

மீன் இலாக்கா கவனிக்க.

சென்னை ராஜ்ய மீன் இலாக்கா சென்ற ஓராண்டு காலமாக மீன் குத்தகைகளை விடாமல் வாளா இருக்கின்றனர். காரணம் சென்ற பிப்ரவரி மாதம் 1-ந் தேதி அரசியலார் பிறப்பித்த உத்தரவேயாகும். ஏரி முதலியவை காலண்டர் வருஷ குத்தகையாகவும், ஆறு முதலியவைகளைப் பசலி குத்தகையாகவும் விடுவது மீன் இலாக்காவினர் மேற்கொண்ட கொள்கைகளாகும்.

சென்ற ஆண்டு மீனவர் சொசைட்டிகளுக்குக் குத்தகை விடாமல் பகிரங்க ஏலத்தில் விட்டு லக்ஷக் கணக்கான மீனவ மக்களைப் பட்டினிபோட்டு வருத்தினர் அரசாங்கத்தார். இம்மாதிரி அரசாங்கத்தார் செய்வித்தவிஷப்பரீக்ஷையால் எத்தனைலக்ஷங்கள் அரசாங்கத்தினர்க்கு வரும்படி கிடைத்ததோ அறியோம். 1956 ஞூ செப்டம்பர் மீ சென்னையில், ராஜாஜி ஹாலில் நடை பெற்ற All India Fisheries Conference ல் உள் நாட்டு ஏரி, குளம் முதலியவைகளை 5 வருட சராசரி குத்தகைக்கே பிஷர்மென் கோவாபரேடிவ் சொசைடிக்கு மீன் இலாக்கா கொடுக்கவேண்டும் என்றும், பிஷரீஸ் டிபார்ட்மெண்ட் வெறும் பணத்தை அதிகமாகக் கோராமல் மீன் உற்பத்தி, மீனவர்களின் நலங்களைக் கவனிக்க வேண்டுமென அரசியலார் மூலம் தீர்மானம் செய்தும்கூட, அறியவில்லை போலும். ஸ்ரீ C. மெச்சோடா அவர்கள், பிஷரிஸ் அட்வைசரி போர்ட் மெம்பர், தூத்துக்குடி அவர்கள்ஷ் தீர்மானங்களை அமுலுக்கு கொண்டு வரும்படி பிஷரிஸ் மந்திரியார் அவர்களுக்கு 5-10-57, 14-10-57தேதியில் செய்து கொண்டுள்ள விண்ணப்பங்கள் கூட இன்றுவரை கவனிக்கவில்லை போலும். ஆதலால் அரசாங்கத்தினர்க்கு வரும்படி முக்கியமா? மக்களின் வாழ்வு முக்கி

யமா? என்பது தெரியவில்லை. நீர்நிலைகளில் இருக்கும் மீன்களை எந்தவகையிலும் பிடித்துவிடுகின்றார்கள் என்பது யாவருமே அறிந்ததே. ஆனால் அதைக் குத்தகை எடுத்தவர்கள் யாரைக் கொண்டு மீன் பிடித்தார்கள்? எப்படிப் பிடித்தார்கள்? என்ன கூலிகொடுத்தார்கள்? அவர்கள் கொடுத்த கூலி நியாய மானதுதானா? அவ்வாறு அவர்கள் கூலி கொடுப்பதற்குக் காரணம் என்ன? குத்தகைக்காரர்களுக்கு எவ்வளவு இலாபம் கிடைத்தது? அந்த இலாபத்தை அவர்கள் என்ன செய்தார்கள்? முதலிய விபரங்களை எல்லாம் அரசாங்கத்தினர் அறியவேண்டியது மிகமிக முக்கியமும் அவசரமுமானதாகும். ஏனெனில், அப்போது தான் அரசாங்கத்தினர் மீனவர் சொசைட்டிகளுக்குக் குத்தகை கொடுப்பதன் உயர்வு காணப்படும். கிராமங்களில் மற்ற இனத்தவர் மீன்பிடிப்பவர்களைக் கைப்பொம்மையாக வைத்துக் கொண்டு தங்களுக்கு அடிமையாக வேலைகளைச் செய்யச் செய்வது தெரியும். மீனவர் அடிமையிலும் அடிமையாகயிருப்பது நன்கு தெரியும். நாடுமுழுவதும் ஏன் உலகம்முழுவதும் கூட்டுறவு ஸ்தாபனங்களை அபிவிருத்திசெய்ய வேண்டுமென்று உலகத்தலைவர்கள்-ஏன் நமது மந்திரிமார்களும்கூட மக்களிடம் பிரச்சாரம் செய்து கொண்டு திரியும் காலத்தில் எலெக்ஷன் தந்திரத்திற்காக ஒன்றுமறியா ஏழை மைனாரிட்டிகளுக்குக் கூட்டுறவு சங்கத்தின் மூலம் குத்தகையைக்கொடுக்க மறுத்ததின் இரகசியம் அம்பலமாகும் என்பது எமது தாழ்மையான அபிப்பிராயம்.

அரசாங்கத்திற்கு வரும்படி தான் முக்கியம் என்று சொல்லப் படுகிறது? மீனவர்களுக்கு மீன் குத்தகை கொடா விட்டால் அவர்கள் எங்குச் சென்று பிழைப்பார்கள்? அவர்களுக்குப் பிழைப்பு இல்லாவிட்டால் அரசாங்கம் வேறு ஏதாவது தொழில் கொடுத்து அவர்களை ஆதரிக்குமா? கிராமங்களில் நிலத்தைச் சாகுபடி செய்பவர்கள் மற்றும் பெரிய மிராசுதாரர்கள் முதலியவர்களே அக்கிராமத்திற்கு எஜமானர்கள். அவர்கள் தங்களுக்கு நிலத்தின் மூலம் கிடைக்கும் வரும்படியோடு மீன் குத்தகை மூலமும் இலாபம் அடைய ஆசைப்படுகின்றார்கள். ஆசை கொள்வது இயற்கைதான். ஆனால் அதே சமயத்தில் அவற்றையே ஜீவனமாகக் கொண்டு வாடும் மக்களின் நிலையை எண்ணிப் பார்க்க வேண்டாமா? குறைந்த கூலிக்கு மீன் பிடித்துக் கொடுப்பதற்கு இவர்கள் ஏன் ஒப்புக்கொள்கிறார்கள் என்று கேட்கலாம்? கேட்பது சுலபம். ஆனால் அவர்களுக்கு அதையும் விட்டு விட்டால் வேறு ஜீவனம் தான் என்ன? அப்படியே விட்டு விட்டாலும் கிராமங்களில் அவன் நிம்மதியாய் வாழ முடியுமா? அவனுக்கு நேரிடும் இடையூறுகளைச் சமாளிக்க அவனால் முடியவே முடியாது என்பதைத் தவிர வேறொன்றும் சொல்வதற்கில்லை.

மீனவர் சொசைட்டிகளில் தில்லு மல்லும் நடக்கின்றது என்று சொல்லப்படுகிறது. இது உண்மையானால் அதற்குப்

187258

பொறுப்பாளிகள் யார் என்பதை அறிய வேண்டியது முக்கியமல்லவா? மீன் இலாக்கா மேற்பார்வை இடுவதோடு ஒவ்வொரு ஆண்டும் கணக்குகளைத் தணிக்கை செய்கின்றார்கள். இதை எப்படித் தவறு என்று சொல்லமுடியும். மற்ற சொசைட்டிகளில் எந்தெந்த விதமாய் அதிகாரிகள் நடத்துகிறார்களோ அதே மாதிரி தான் மீனவர் சொசைட்டிகளிலும் நடத்துகிறார்கள். மற்ற சொசைட்டிகளின் மீது அரசாங்கத்திற்கு நம்பிக்கை இருக்கும்போது மீனவர் சொசைட்டிகளிடத்தில் மாத்திரம் நம்பிக்கை குறைந்ததற்குக் காரணம் தான் என்ன? இங்கேயுள்ள அங்கத்தினர்களும் டைரக்டர்களும் கல்வியறிவு அற்றவர்களாகவும், ஏழைகளாகவும் இருக்கின்றார்கள் என்ற காரணங்களுக்காகவா? அல்லது கிராமங்களில் உள்ள பணக்காரர்களுக்கு அடங்கி ஒடுங்கி பணி புரிவதற்குரிய லாயக்கில்லையே என்பதற்காகவா? அல்லது ஒருசில பணக்காரர்களுக்கு இதிலிருந்து கிடைக்கும் வரும்படி போய் விடுகிறது என்பதற்காகவா? இவைகள் ஒவ்வொன்றையும் அலசிப்பார்த்து தீர யோசித்துத் தான் B. S. O. 211-ம். G. O. 200-ம் அமுலுக்குக் கொண்டுவராமல் செய்துவிட்டார்கள்.

ஜாதியின் பெயரால் சலுகை வேண்டாம் என்று சொல்லப்படுகிறது. ஜாதி ஒழிய வேண்டியது முக்கியம் என்பதை நாங்களும் உணர்கின்றோம். நாங்கள் கேட்பது ஜாதியின் பெயரால் அல்ல. தொழிலின் பெயரால் தொழிலுக்குப் பாதுகாப்புக் கொடுங்கள் என்றுதான் முறையிடுகின்றோம். மீன் பிடிக்கத் தெரியாமல் வேறுஜீவனம் செய்பவர்களை வேண்டுமானால் மீனவர் சொசைட்டிகளில் மெம்பர்களாகச் சேர்க்க வேண்டாம். மீன் இலாக்காவினர் அதை அலசிப் பார்த்துச் செய்யட்டும். ஆட்சேபணை இல்லை. ஆனால் மீனவர்கள் இருக்கும் சொசைட்டிகளுக்குக் குத்தகை கொடுக்க மாட்டேன் என்றுசொல்வது விந்தையிலும்விந்தையாக அல்லவோ இருக்கிறது.

இவைகள் மட்டுமல்ல. இன்னும் மீனவர்களுக்குள்ள குறைகளையெல்லாம் மந்திரிமார்களுக்குத் தெரியப் படுத்த வேண்டியது எவ்வளவோ உள்ளன. இவைகளை யெல்லாம் பொறுமையோடு கேட்பதற்குக்கூட அவர்களுக்கு ஓய்வில்லை. அவர்களை நிர்ப்பந்தப் படுத்திக் கேட்கச் சொல்வதற்குப் பொறுப்பு வாய்ந்த-செல்வாக்குள்ள தலைவர்கள் இச் சமூகத்தில் இல்லை. என்னதான் செய்வது? யாரிடத்தில் தான் எங்கள் குறைகளைச் சொல்வது? பலர் மீன் பிடித்துப் பழகிவிட்டோம். அவர்கள் சாகும் வரையிலாவது அத்தொழிலுக்கு ஊக்கம் காட்டுங்கள். இனிவரும் சந்ததிகள் வேண்டுமானால் அத்தொழில் செய்யாமல் வேறு தொழில் செய்ய முற்படலாம். உள்ளவனின் நிலையைச் சரிசெய்வது எப்படி?

நிற்க, எப்பொழுதும் அக்டோபர் மாத ஆரம்பத்திலேயே கூட்டுறவு சங்கத்தினர் தங்களுக்கு இன்னின்ன ஏரிகள் வேண்டும் என்றும் 5 வருட சராசரி இவ்வளவு என்றும் மீன் இலாக்கா

அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்திவிடுவதும், மீன் இலாக்காவினர் ஆர அமர யோசித்துக் கூட்டியும் குறைத்தும் திருத்தியும் ஜனவரி மாதத்திற்குள் உத்தரவு அனுப்பிவிடுவதும் சகஜமாக உள்ள நிலைமை. ஆனால் இவ்வருஷம் நவம்பர் மாதம் முடிந்தும்கூட எந்த சொசைட்டியும் இதைப்பற்றி விண்ணப்பித்துக்கொள்ளாத தற்குக் காரணம் மேற்கண்ட அரசாங்கத்தினர் உத்தரவேயாகும். மீன் இலாக்கா இதைக்குறித்து என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டதோ என்பதை அறியோம். எது எப்படியாயினும் சரி. இனியும் காலங்கடத்தாமல் மீன் இலாக்காவினர் இதற்கான எல்லா வகையான நடவடிக்கைகளையும் நடத்தி ஜனவரி மாதத்திற்குள் சொசைட்டிகளுக்குக் குத்தகை கொடுக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றனம்,

நிற்க, ராஜ்யத்திலுள்ள எல்லா நீர்நிலைகளையும் மீன் இலாக்காவே எடுத்துக்கொண்டு மீனவர் சொசைட்டிகளுக்குக் குத்தகை தரவேண்டுமென்று சென்ற 20 ஆண்டுகளாக மாநாடுகளின் மூலமும், நேரிலும், அரசாங்கத்தினர்க்கும், மீன் இலாக்காவினருக்கும் விண்ணப்பித்துக் கொண்டுள்ளோம். யாதொரு பயனும் இல்லை. மீன் குத்தகை சொசைட்டிக்குக் கொடுக்க முற்பட்டாலும், ஜில்லா கலெக்டர்கள் அதைக் கொடுக்காமல் இருக்கவோ உயர்த்தவோ செய்கிறார்கள் என்பது அதிகாரிகளுக்கு நன்கு தெரியும். ஆகையால், எல்லா நீர்நிலைகளையும் மீன் இலாக்காவினர் எடுத்துக்கொண்டு ஏழை மீனவர்களுக்குப் பிழைப்பைக் கொடுத்துக் காப்பாற்றவேண்டியது அரசாங்கத்தினருடையவும் மீன் இலாக்காவுடையவும் கடமையாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மேலும், அக்டோபர் மாதத்திலேயே அட்வைசரிபோர்டு கூட்டம் நடக்குமென்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் இதுவரையில் அக்கூட்டம் நடைபெறாததற்குரிய காரணம் என்னவென்று தெரியவில்லை. காலம் கடத்திக்கொண்டே போவதனால் மீனவர் படும் கஷ்டம் எவ்வளவென்று சொல்லமுடியாது. எவ்வளவு நாளைக்குத் தொழிலின்றி ஜீவித்திருக்கமுடியும் என்பதை அந்நிலையில் உள்ளவர்களே அறிவர். உல்லாச வாழ்க்கை நடத்தும் அதிகாரிகளுக்கும், செல்வச் சீமான்களுக்கும் அதன் கஷ்டம் எப்படித் தெரியும்?

ஆகையால், மீன் இலாக்காவினர் தங்களின் முழு முயற்சியையும் மேற்கொண்டு மீனவர்களின் கஷ்ட நஷ்டங்களை விளக்கி ஆவன செய்வதற்கு உடனே முயலவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றனம். (ஆசிரியர்.)

—o—

மீனவர் கூட்டுறவு சங்க மகாநாடு

(கூத்தன்)

சென்னை ராஜ்யம் முழுவதும் உள்நாட்டு மீனவர்களின் கூட்டுறவு சங்கங்களும், கடலோர மீனவர்களின் கூட்டுறவு சங்கங்களும் நிறைய இருக்கின்றன. இவைகளில் உள்நாட்டு மீனவர்களின் சங்கங்கள் தான் மிகவும் தொன்மை வாய்ந்தவை.

அரசாங்கத்தார் உள்நாட்டிலுள்ள நீர்நிலைகளை மீனவர் சொசைட்டிகளுக்குக் குத்தகை கொடுத்து வந்தார்கள். சென்ற ஆண்டு பிப்ரவரி மாதம் 1-ந் தேதி ஒரு வருஷத்திற்குப் பரீக்ஷிக்க வேண்டுமென்று எல்லா நீர் நிலைகளையும் பகிரங்க ஏலத்திற்குக் கொண்டு வந்தார்கள். இன்னமும் அவ்வுத்தரவை ரத்து செய்வதற்கு அரசாங்கத்திற்கு அபிப்பிராயம் இல்லையென்று தெரிகிறது. வருஷா வருஷம் அக்டோபர் மாதத்திலேயே சொசைட்டிகளிடமிருந்து குத்தகை தொகையைக் கேட்டு டிசம்பர் முடிவுக்குள் பெரும்பாலும் கொடுத்து விடுவார்கள். கனம் மந்திரிமார்கள் மீனவ மக்களிடம் உள்ள காருண்யத்தால் சொசைட்டிகளுக்குக் கொடுப்பதை விட பகிரங்க ஏலத்தில் விடுவதே சிறந்தது எனக் கருதுவதாகத் தெரிகிறது. மீனவர்கள், மாநாட்டின் மூலம் தங்கள் குறைகளைத் தெரிவித்துக் கொண்டார்கள். கமிட்டிக் கூட்டங்களின் மூலமும் தங்கள் குறைகளைத் தெரிவித்துக் கொண்டார்கள். பல முறைகள் நேரில் மகஜர்களைக் கொடுத்தும் தெரிவித்துக் கொண்டார்கள். இதுவரை சாதகமான பதில் காண்பது கடினமாகவே இருக்கிறது. மீனவர் கூட்டுறவு சம்மெளனம் ஆரம்பிக்க மீன் இலாகாவினர் திட்டப்படி ஒவ்வொரு சொசைட்டியும் ரூ. 102 செலுத்தியுள்ளது. இன்னும் அதையும் ஆரம்பித்துக் கொடுத்தபாடில்லை. மீன் தொழில்வள அட்வைசரி போர்டு கூட்டத்திற்கு இதைப்பற்றித் தெரிவித்திருந்தும் முதல் கூட்டத்தில் இவ்விஷயம் வரவே இல்லை. 2-வது கூட்டம் அக்டோபரில் கூடுவதாகச் சொன்னார்கள். இன்னும் கூட்டவில்லை. அயல் நாட்டிலிருந்தோ மத்திய அரசாங்கத்திலிருந்தோ மீனவர் நலனுக்காக ஏதாவது உதவி கிடைத்தால் அது கடலோர மீனவர்களுக்குச் செல்லுகின்றதே யொழிய உள்நாட்டு மீனவர்களுக்கு ஒரு துரும்புகூடக் கிடைப்பது இல்லை.

இங்கிலையில் உள்நாட்டு மீனவர்களைப்பற்றி அரசாங்கம் என்ன நினைத்திருக்கிறதோ தெரியவில்லை. உள்நாட்டில் உள்ள மீனவர்கள் தங்கள் தொழிலை உப தொழிலாக வைத்துக் கொண்டிருக்கிறார்களா அல்லது அதையே தங்கள் ஜீவனத் தொழிலாக வைத்துக் கொண்டிருக்கிறார்களா என்பதை அரசாங்கம் உணரவில்லை. உணரவும் முற்படவில்லை. அத்தொழில் செய்பவர்களை அடியோடு நசுக்கி விடவேண்டும் என்று அரசாங்கம் விரும்பினால் அதற்குரிய செயல்களில் ஈடுபட்டு உடனே செய்யட்டும். பட்டினி

போட்டு இப்படிக் கொல்ல வேண்டிய அவசியமோ அல்லது மேல் ஜாதிக்காரர்களிடத்தில் கைகட்டி சேவகம்புரிவதற்கோ செய்விக்க வேண்டியதில்லை. உழவர்களுக்கும், நெசவாளர்களுக்கும், ஹரி ஜனங்களுக்கும் உள்ள பாதுகாப்புக்களில் நூற்றில் ஒருபங்குகூட மீனவர்களுக்கு இல்லை. மீனவர்கள் லக்ஷாதிபதிகளா? அல்லது பட்டதாரிகளை நிறைய உடையவர்களா? அல்லது அரசியலில் முன்னணியில் இருக்கிறார்களா? அந்தஸ்தில் செல்வாக்கில் உயர்ந் திருக்கிறார்களா? ஒன்றிலும் இல்லாமல் சுத்த சூன்யமாயிருக் கும் இவர்களுக்குப் பாதுகாப்பு வேண்டியது சொசைட்டி மூலம்தான். அதற்கும் இப்போது அரசாங்கத்தினர் பலவித சாக் குப் போக்குச் சொல்லிக் கொண்டு வருகின்றார்கள்.

மீனவர்கள் தங்கள் தொழிலைச் செய்து ஜீவனம் செய்ய வேண்டுமானால் சொசைட்டிகள் யாவும் ஒன்றாகச் சேர்ந்து அவர் களின் நியாயமான குறைகளை அரசாங்கம் கவனிக்கச் செய்ய வேண்டும். செங்கற்பட்டு, வட ஆற்காடு ஜில்லாக்களிலுள்ள சொசைட்டிகள் இதற்காக முன்வந்து தங்கள் செல்வாக்கைப் பயன் படுத்தி மாநாடு முதலியவைகளைக் கூட்டி நியாயமான குறைகளை அரசியலார்க்குத் தெரியப் படுத்த முடியாது. தஞ்சை, திருச்சி, தென் ஆற்காடு ஜில்லாக்களில் உள்ள கூட்டுறவு சங்கங் கள் உடனடியாகவே அதாவது டிசம்பர் மாதத்திற்குள்ளாகவே ஏதாவது பரிகாரம் தேடாவிட்டால் மீனவ மக்களின் நிலை அதோ கதியாய்விடும் என்பதில் வியப்பில்லை.

சென்னை ராஜ்ய மீனவர் கூட்டுறவு சொசைட்டி மாநாடு என்ற பெயரால் கனம் மந்திரிகளை வருவித்து விஷயங்களைத் தெளிவு பெறச் சொல்லி விளங்க வைக்கவேண்டும். அப்படி ஏதா வது செய்வதற்கு இஷ்டப் படாவிட்டால் மத்திய அரசாங்கத் தாரிடம் நம்மவர்களுக்குள்ள குறைகளை நேரில் சென்று விண்ணப் பித்துக் கொள்ளவேண்டும். அம்மாதிரி செய்வதற்கும் மேற்கூறிய தஞ்சை, திருச்சி ஜில்லா செசைட்டிகள் தாம் முன்னிருந்து செய லாற்ற வேண்டும்.

இவைகளில் ஏதாவது ஒன்றைச் செய்ய முன் வராவிட்டால் மீனவர் சமூகத்திற்கும் மீன் பிடித்தலுக்கும் எந்தவித சம்பந்தமு மில்லாமல் கள்ளுக்கடை போனபின் மரமேறிகள் எவ்வளவு தாழ்ந்த நிலைக்கு வந்து விட்டார்களோ அதைவிட மிகவும் தாழ் மையான நிலைக்குத் தான் மீனவர் வந்து சேரவேண்டும் என்பதை மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ள வேண்டியதாய் இருக்கிறது. ஆகையால் இதை உடனடியாகக் கவனித்து தஞ்சை திருச்சி ஜில்லா சொசைட்டிகள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றனம்.

—(o)—

வைத்தியம்

தமிழ்ப்புலவர் சிவ. முருகசிவம்
(75, நைனியப்பன் தெரு, சென்னை-1)

நீரின் குணம்

உலகில் மக்கள் உயிர்வாழ உணவு அவசியமானது. அது காற்று, நீர், உணவு ஆக மூன்று வகையாகப் பிரிக்கப் படுகின்றது. மனிதன் காற்றில்லாமல் சில நிமிஷம் வாழலாம். நீரில்லாமல் சில மணி நேரம் வாழலாம். உணவில்லாமல் சில நாள் வாழலாம். வாழ்க்கைக்கு உணவுப் பொருள் எப்படித் தேவையானதோ அப்படியே காற்றும் நீருமாகும்.

அந்த மூன்றினுள் நீரை மாத்திரம் வைத்திய முறைப்படி ஆராய்வோம். மழை ஜலம், பனி ஜலம், கடல் ஜலம், ஊற்று ஜலம் என்று நீர் நான்காகும். திருவள்ளுவர் தமது அருமைத் திருக்குறளில் கூறியபடி,

நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகுமாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு.

வானத்திலிருந்து பெய்யும் பரிசுத்தமான மழை ஜலமானது நிலத்தினுடைய குணம் போல் மாறுபடுகின்றது. அதையே விவரமாக வைத்திய நூலிலும்,

தண்ணீர்க் குணமெல்லாந் தான் கேள் மடமயிலே
மண்ணின் குணமல்லான் மற்று முண்டோ—உண்ணுங்கால்
ஆறு குள மேரிமடு வாழ்ந்தகூ பஞ்சுனையுள்
ஊ ரருவி யென்னு முலகு.

தண்ணீர்க் குணங்களெல்லாம் மண்ணின் குணமேயன்றி வேறில்லை யென்று கூறியிருக்கிறது. அஃது ஆறு என்றும் குளமென்றும் குட்டையென்றும், ஏரியென்றும், மடுவென்றும், கிணறுஎன்றும், சுனையென்றும், அருவியென்றும் பலவிதமுண்டு. அந்த அருவி ஊற்றருவி மலையருவியென இரண்டு விதமுண்டு.

பொதுவாக எல்லா வகையிலும் ஆற்று நிர் நல்லது. ஆற்று ஜலத்தினால் வாதபித்த, கப தோஷம், தாகம், சரீரத்தின் உஷ்ணம், பித்தம், மந்தமான சிற்சில ரோகங்கள்போகும். சுக்கில விருத்தி யுண்டாகும்.

நதிகளிலே சில நதிகளைப் புண்ணிய நதி என்றும், புண்ணிய தீர்த்தங்கள் என்றும் கொண்டனர். காரணம் சில நீர்களினலே மக்களுக்கு ஜுரமும், சொறி சிரங்கும், ஜலதோஷமும் கபரோகங்களும் வருதலுண்டு. அப்படிக் கெடுதல் செய்யாது சப்த தாதுக்களுக்கும் பலத்தைச் செய்யும் சப்த நதிகளைத் தேர்ந்தெடுத்தார்கள். அதனேடு ஒத்து அனுகூலம் செய்யும் நதிகளுமுண்டு என்பதை மறக்கக் கூடாது. கங்கை, யமுனே, கோதாவரி, சரஸ்வதி, நர்மதா, சிந்து, காவேரி இந்த ஏழு நதிகள் தாம் அவைகள்.

1. கங்கை :—உட்சூடு, மந்தாக்கினி, க்ஷயம், பித்தம், கோபம், வாதாதிக்கம், கிழப்பிரமேகம், தேக எரிச்சல் ஆகிய இவைகள் குணமாகும்.

2. யமுனே :—அதிக ஜுரம், வெண் குஷ்டரோகம், இருமல், வெட்டை, தாகம் பித்த வாந்தி, சுவாசம், அயர்ச்சி, விந்து நஷ்டம், வெண் பாண்டுரோகம் இவை போம்.

3. கோதாவரி :—முத்தோஷ கோபம், பலவிதச் சொறி சிரங்குகள், உட்சிரங்கு, நடுக்கற் சுரம் ஆகியவை போகும்.

4. சரஸ்வதி:—சரீர நோவு, தேகக்குத்தல், மூத்திரத் தோஷம் மூளைக் கொதிப்பு, மறதி நீங்கும்.

5. நர்மதை :—வாந்தி ஜுரம், விக்கல், காமாலை, வயிற்றுப் பித்தம், கைகால் எரிவு. சிலேஷ்மவாத தொந்தம் ஆகிய இவைகள் விலகும்.

6. சிந்து:—சரீரக் குடைச்சல், புத்தி மயக்கம், வெட்டைப்புண் வியர்வை நாற்றம், தாது நஷ்டம், அஸ்திதாது ஜுரம், வெள்ளை முத்திர கிரிச் சுரம், தாகம் ஆகியவை நீங்கும்.

7. காவேரி :—வயிற்றுப்பிசம், இருமல், இரைப்பு, வீக்கம், கட்டுக்கட்டு, ஆயாசம், ஜலதோஷம், ரத்தகுன்மம், நா வரட்சி ஆகிய இவை போய் அழகுண்டாக்கும்.

8. தாமிரபரணி :—சகல ஜுரம், பித்த தோஷம், கண் புகைச்சல், உட்சுரம், சுவாசரோகம், க்ஷயம், எலும்புருக்கி, கை கால் எரிவு, அதிதாகம் இவை நீங்கும்.

9. வைகை :—வாதமேகம், குஷ்டம், சோபாரோகம், கரப்பான், தேகஎரிச்சல், தாகம், பாதசேஷப கபவாதம், தாது நஷ்டம், சில விஷம் ஆகிய இவை நீங்கும்.

10. கிருஷ்ணு :—தேகாரோகியம், கபாலச்சூடு, இறைப்பு, இருமல், மந்தரோகம் இவை நீங்கும். (தொடரும்.)

தேயும் நிலவு!

"தென்குமரன்"

அதோ, வானத்திலே நிலவு! நேற்றிலிருந்து தேய்ந்து கொண்டுதான் வருகிறது அது! என் வாழ்வும் அப்படித்தான் தேய்ந்துகொண்டு வருகிறது. ஆனல் என் வாழ்க்கைக்கும் அந்த நிலவுக்கும் ஒரே ஒரு வேறுபாடு! நிலவு தேய்ந்து கொண்டே வந்து, ஓர் நாள் மறைந்துவிடும்; பின் மீண்டும் தோன்றி வளரும்! என் வாழ்வு அப்படியல்ல! அது தேய்ந்தது தேய்ந்ததுதான்; மறைந்தது மறைந்ததுதான்!

'நீயேன் இப்படிப் பேசுகிருய்? உன் வாழ்வுக்கு என்ன வந்துவிட்டது? உன் கதைதான் என்ன?' என்று என்னைக் கேட்கிறீர்களா? சொல்லுகிறேன் கேளுங்கள் என் வாழ்வில் இருள் படர்ந்துவிட்ட கதையை; என் வாழ்வு தேய்நிலவு ஆன சரித்திரத்தை!

இன்று நானேர் பணக்காரன். திரையுலகத்தின் வசன கர்த்தா! ஆனல், அன்று நானேர் ஏழை. வாழ்வுக்காகத் தினம் தினமும் சாவுபுரிக்குச் சென்று வருவேன்! அந்த வாழ்வுதான், சின்ன வயது முதல் இரு மலரும் ஒரு மணமுமாய் வாழ்ந்துவிட்ட என்னையும் என் சுலோசனவையும் பிரித்து வைத்து வேடிக்கை பார்த்தது! ஆமாம், வறுமை எங்கள் காதலைத் துண்டித்து விட்டது! என் சுலோசன வேருெருவனுக்கு மனைவியானுள். என் சிந்தையெல்லாம் நிறைந்திருந்த அந்தப் பேசும் தெய்வம் வேருெருவனுக்கு மனைவியாக்கப்பட்டாள். என் இதயச் சோலையிலே சுதந்திரமாகச் சுற்றிப் பறந்த அந்தக் கிளி, வேருெருவனின் இல்லறக் கூண்டிலே சிறைப்படுத்தப்பட்டது!

என் சுலோசனவிற்குத் திருமணமானதற்கப்புறம், அவளை நான் சந்திக்கவேயில்லை. என்னையும் திரையுலகம் அழைத்துக் கொண்டது. வசனகர்த்தாவாக்கிவிட்டது. என் சுலோசனவை அணைத்து மகிழவேண்டிய நான், தமிழ்த்தாயின் அரவணையிலே அகமகிழ்ந்து கிடந்தேன்! என்னேரமும் 'அந்த' உலகத்தில் உழைத்தேன், உழைத்தேன், உழைத்துக்கொண்டேயிருந்தேன். அந்த உழைப்பு என்னை உயர்த்திவிட்டது; பணக்காரனக்கி விட்டது.

அன்ருேர் நாள்......

நான் காரில் அவள் வீட்டுப் பக்கமாகப் போய்க்கொண்டிருந்தேன். என் கண்களும் மனமும் தாமாகவே அவள் வீட்டை நோக்கின. அங்கே நான் பார்த்தது......! என் சுலோசன அந்த உயிரோவியம்—சிதைந்த ஓவியமாக நின்றுகொண்டிருந்தாள்! கழுத்திலே மாங்கல்யம் இல்லை; உடலிலே அணிகள் இல்லை; இதழ்களில் எப்பொழுதும் தவழ்ந்து விளையாடிக்கொண்டிருக்கும்

அந்தப் புன்சிரிப்பு இல்லை! திறமையுள்ள ஓவியன், சோகச்சித்திரம் வரைந்தால் எப்படியிருக்குமோ அப்படி இருந்தாள் என் சுலோசனு! தேர்ச்சிபெற்ற எழுத்தாளன் சோகநிலையிலிருக்கும் கதாநாயகியை வர்ணிக்கும்போது எப்படியிருப்பாளோ அப்படி இருந்தாள் என் சுலோசனு! ஆம். என் சுலோசனு இளம்விதவை!

நான் ஓட்டிச்சென்ற கார் அவள் வீட்டண்டை நின்றது. காரை நானுகவே அங்கே நிறுத்தவில்லை; என் மனம் கால்களுக்கு உத்தரவு போட, கால்கள் தம் பணியைச் செவ்வனே செய்து விட்டன!

என்னைக் கண்டதும் என் சுலோசனு ஓடிவந்தாள். 'அத்தான்!' என்ற அழுகையோடு அவளுடைய அழுகுரல் என்னுடைய இரத்த வோட்டத்தை நிறுத்தி விடும்போலிருந்தது!

"சுலோ! நீ......நீ......விதவையா?" நான் பேசமுடியாது இப்படிக் கேட்டேன்.

"அத்தான்......! என் வாழ்க்கைப் பாலில் நஞ்சு கலந்து விட்டது அத்தான்! நஞ்சு கலந்துவிட்டது! அம்மி மிதித்து அருந்ததி காட்டி நடத்தப்பட்ட திருமணம் என்னை அந்தகாரத்தில் தள்ளிவிட்டது! மீளமுடியாத வேதனையிருளில் விழுந்து விட்டேன் அத்தான்! என் வாழ்க்கை வானத்தில் இனி தேனிலவே தோன்ருது அத்தான்! தேனிலவே தோன்ருது!" இப்படிக் கூறியவள், என் கால்களில் விழுந்து அழுதுகொண்டே இருந்தாள்! யாரை எண்ணி எண்ணி அன்று வரை பிரமச்சாரியாகவே இருந்தேனே, அவள் என் கால்களிலே விழுந்து புலம்பிக்கொண்டிருந்தாள்! அவள் இந்த வையம் மறந்து அழுதுகொண்டேயிருந்தாள்! நானும் சிலையாய் நின்றுவிட்டேன்! உணர்ச்சி எரிமலை வெடித்துவிட்டது; அதற்குமுன் எல்லாம் பாழ்தானே!

என் சுலோசனு எவ்வளவு நேரம் அழுதுகொண்டிந்தாளோ? எனக்குத் தெரியாது! 'அத்தான்!' எனும் குரல் கேட்டுக் குனிந்து பார்த்தேன். என் சுலோசனு தன் கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தாள். அவள் செய்கை எனக்குப் புதிராய் இருந்தது! என்னைக்காரினுள் ஏற்றிவிட்டுத் தானும் ஏறிக் கொண்டாள்!

"ம்ம்... புறப்படுங்களத்தான்!"

அவள் ஆணையிட்டாள்; நான் திகைத்துப்போனேன்!

"என்ன சுலோசனு இதெல்லாம்? என்ன? எங்கே விடச் சொல்கிருய், காரை?"

"குள்ள மனம் உடையவர்கள், கல் நெஞ்சர்கள் இல்லாத உலகத்திற்கு! ஏனத்தான் இப்படி விழித்துப் பார்க்கிறீர்கள் என்னை? பைத்தியம் பிடித்துவிட்டதா எனக்கு என்று பார்க்கிறீர்களா? சுய உணர்வோடு, தெளிவுள்ள நெஞ்சத்தோடு மன

உறுதியோடுதான் பேசுகிறேன்! நான் தீர்மானம் செய்துவிட்டேன் உங்களோடு வாழ்வு செய்வது என்று! என் வேண்டுதலைப் புறக்கணிக்காதீர்கள் அத்தான்! நம் வாழ்வைச் சிதைத்துவிடாதீர்கள்! சுடுகாடாக்கப்பட்ட நம் வாழ்வைச் சுதந்திர சோலையாக்குவோம்! ம்ம்... காரைச் சீக்கிரம் ஓட்டுங்களத்தான்! நம் வாழ்வுப் பயணம் தடைபட்டுவிடப்போகிறது!'' ஆவேசத்தோடு இப்படிப் பேசினுள் என் சுலோசனு!

"நம் வாழ்வுக்காக எதுவேண்டுமானுலும் செய்துவிடலாம்! ஆனுல்......உலகம் உன்னை நிந்திக்குமே! என்னை ஏசுமே!'' நான் கேட்டேன் இப்படி.

"அத்தான்! சிறிய வயதிலே நீங்கள் காட்டிய அந்த அன்பு ஆதரவு நம் காதல் உண்மையானுல் என் பேச்சுக்கு மதிப்பு தாருங்கள்! வறண்ட என் வாழ்வை வளமுள்ளதாக்குங்கள்! புயல் வீசும் என் வாழ்வில் தென்றல் வீசச் செய்யுங்கள்! இருள் படர்ந்த என் இதயத்தில் ஒளியேற்றுங்கள்! உங்களுக்கு உறுதியில்லையென்ருல், இப்பொழுதே சொல்லிவிடுங்களத்தான்! இப்பொழுதே சொல்லிவிடுங்கள்! எனக்கு எங்கே சாந்தி கிடைக்குமோ அங்கே போய்விடுகிறேன்!''

அவள் பேசிக்கொண்டே காரைவிட்டுக் கீழே இறங்கப் போனுள். 'சுலோ......!' என்று நான் கூறி, அவள் கைகளைப் பற்றி இழுத்தேன். 'கைவிடுங்கள் அத்தான்!' என்ருள் அவள். 'கைவிடமாட்டேன் சுலோ! உன்னை என்றுமே கைவிடமாட்டேன்!' இப்படி என் வாய் பேச, கைகள் வேகமாகக் காரை ஓட்டின!

உற்ருரையும் உறவினரையும் உதறிவிட்டேன் என் சுலோசனுவின் வாழ்வை வளப்படுத்த. அந்த என் முயற்சி பலித்ததா? என் எண்ணம் ஈடேறியதா? அவளை மணம் செய்துகொள்வதால், அவள் வேதனை மறையும் என்று அவளைப் பதிவுத்திருமணம் செய்துகொண்டேன். பயன்...? வேதனை அதிகரித்தது! படுத்த படுக்கையாய்விட்டாள் என் மனைவி!

"அத்தான்! பெண்புத்திப் பின்புத்தி என்பார்கள்! அது உண்மையாகிவிட்டது அத்தான்! உங்கள் வாழ்வைப் பாழ்செய்துவிட்டேனே! என்னைச் சந்திக்காமலிருந்திருந்தால் உங்களுக்கும் எனக்கும் இந்த நிலை ஏற்பட்டிருக்காதே! தனியாக வாட வேண்டிய நான், உங்களையும் என்னேடு சேர்த்துக்கொண்டேனே! அத்தான்! என் தெய்வமே! என்னை மன்னித்துவிடுங்கள்!'' சுலோசனு எப்பொழுதும் இப்படியே பிதற்றிக்கொண்டிருந்தாள்!

"வீணுக வேதனைப்படாதே என் உயிரே! நீ அழுதால் நானும் உன்னேடு அழுவேன்!'' இப்படி நானவளைப் [illegible]றுத்துவேன்; அவள் தன் அழுகையை நிறுத்திவிடுவாள் அந்த வேளைக்கு!

மணமான பின் எங்கள் வாழ்வு இப்படித்தான் கழிந்தது! அவளை மணந்து கொண்டால், ஓரளவு மகிழ்ச்சி ஏற்படும் எங்கள் வாழ்வில் என்று நம்பிய என் நம்பிக்கை நாசமானது! தென்றல் வீசவேண்டிய வாழ்வில் புயல்தான் வீசியது! ஒளி ஏற்பட்டிருக்க வேண்டிய வாழ்வில் இருள்தான் கப்பியது!.

அந்த நாள் என்னைச் சோதனைக்கு ஆளாக்கிய நாள்; வேதனைக் கடலில் தள்ளிவிட்ட நாள்; என் வாழ்வைத் தேயும் நிலவாக்கி விட்ட நாள்! திரையுலகத்தினின்றும் என்னைப் பிரித்து விட்ட நாள்!

அன்று என் சுலோசனாவின் முகத்தில் ஒருவித ஒளி—களை நிறைந்திருந்தது! என் சுலோசனா அணையப்போகும் விளக்கு என்பதை நானப்போது அறிந்துகொள்ளவில்லை! என் அர்த்தமற்ற மகிழ்ச்சி நிலையற்றது; விடிந்தால் செத்துவிடும் அது என்பதை அப்போது உணரவில்லை! ஞாயிற்றிடமிருந்து ஒளிபெற்று மிளிரும் திங்களைப்போல, என் முகத்திலும் களை பரவியது! ஆர்வத்தோடு என் சுலோசனாவை நெருங்கி, பக்கலில் உட்கார்ந்தேன்; அவள் ஒருவித உற்சாகத்துடன் எழுந்து உட்கார்ந்து பேசவாரம்பித்தாள்.

"அத்தான்! என்னை மணந்த உங்களுக்கு நான் தந்த சுகம் வேதனைதான்! என்னை மன்னித்து விடுங்களத்தான்! என்னை மன்னித்துவிடுங்கள்! ஆமாம், இன்றைக்கு நீங்களும் உங்கள் நண்பரும் சேர்ந்து எழுதிய 'விதவை'ச் சினிமாவைச் சிதம்பரம் தியேட்டரில் வெளியிட்டிருக்கிறார்களாமே? நீங்கள் எழுதிய கடைசிக் கதை அதுதானா அத்தான்?"

என் மனைவி பேசிக்கொண்டேபோனாள். என் கண்கள் நீரைச் சிந்தின! அதைக் கவனித்துவிட்டவள் பதறினாள்.

"அத்தான்! ஏனத்தான் கண்ணீர் விடுகிறீர்கள்? என்னை உங்களுடன் அழைததுப் போவதற்குக் கஷ்டமாயிருக்கிறதா அத்தான்? என்னுடைய இந்தக் கடைசி ஆசையை நிறைவேற்றுங்களத்தான்!"

என் அன்பு மனைவி, கண்ணீர்விட்டுக் கெஞ்சினாள் நீண்ட நாட்களுக்கு அப்புறம். என் மனைவி என்னைச் சினிமாவிற்கு அழைத்துப்போக வேண்டுதல் விடுத்தாள்! என்னால் எப்படித் தட்டிக்கழிக்க முடியும் அவளாசையை!

நானும் எனது நண்பரும் உருவாக்கிய 'விதவை'யை விதவையாயிருந்து மனைவியான என் சுலோசனா பார்த்தாள்! அந்தப் படத்திற்குப் பொதுமக்கள் காட்டிய ஆதரவைப் பார்த்துப் பூரிப்படையவேண்டிய என் காதல் மனைவி, கண்ணீர் விட்டாள்! என் நெஞ்சு உதரம் கொட்டியது!

இருவரும் வீட்டிற்கு வந்தோம். அன்றிரவு நான் சிந்தனையிலிருந்தேன். என் மனைவி என்னை அருகே அழைத்தாள். நான்

அவளிடம் சென்று உட்கார்ந்தேன். என் கைகளைப் பற்றித் தன் முகத்தில் ஒற்ற வைத்துக்கொண்டாள்.

"என்ன சுலோசனு இதெல்லாம்?" நான் ஒன்றும் விளங்காது கேட்டேன். கண்ணீருக்கிடையே அவள் பேசினுள்:

"அத்தான்! உங்களுடைய 'விதவை' ஒரு அமரகாவியமத்தான்! விதவையொருத்தியைத்தான் மணப்பேன் என்று சீர்திருத்தம் பேசியவன், பாவம் இரண்டு பெண்களை விதவையாக்கிவிட்டுச் செத்துவிட்டானே! அத்தான்! உண்மையோடு என்னைக் காதலித்தீர்கள்; அதனுல், விதவையாயிருந்த எனக்கு வாழ்வுதர, மணம் செய்துகொண்டீர்கள் என்னை; ஆனுலும் அத்தான், உங்கள் எண்ணம் முற்றுப் பெறவில்லையே! என்னை வாழவைக்க முயன்றீர்கள்; உங்கள் முயற்சி தோற்றது! பட்ட மரமத்தான் நான்! பட்ட மரம்! இன்னும் சின்னேரத்திற்குள் விழுந்தாலும்.....

அதற்குமேல் அவள் பேசியது என் காதுகளில் விழவில்லை! கடல் பொங்கிவிட்டதைப்போன்ற இரைச்சல் என் காதுகளில் அலைமோதிற்று! என் முகத்தைத் தலையணையினுள் புதைத்துக்கொண்டு விம்மினேன்; கதறினேன்; தலையைத் தரையில் மோதிக்கொண்டேன்!

ஆம்; என் வாழ்க்கை நிலத்தில் மங்கிய ஒளி பாய்ச்சிக்கொண்டிருந்த நிலவு மறைந்துவிட்டது, என்னை வேதனை இருளில் தள்ளிவிட்டு! என்னுடைய வாழ்க்கை என்கிற கண்ணுடியை என் சுலோசனுவின் மறைவு உடைத்துவிட்டது! உடைந்த கண்ணுடியை ஒன்ருக்க முடியாது; என் வாழ்வும் அப்படித்தான்! திரையுலகை மறந்தேன்; எல்லாம் மறந்தேன்! என் வாழ்க்கையின் இன்பமே மறைந்துவிட்டது!

அதே, வானத்திலே தேயும் நிலவைப் பாருங்கள்! என்னுடைய வாழ்வும் கூட ஒரு தேயும் நிலவுதான்! வானத்து நிலவு தேயும்; மறையும்; தோன்றும்; வளரும்! ஆனுல் என் வாழ்வு? அது தேய்ந்தது தேய்ந்ததுதான்! மறைந்தது மறைந்ததுதான்! மறையும் அந்த இறுதி கட்டத்திற்குத்தான் என் வாழ்வு போய்க்கொண்டிருக்கிறது! என் வாழ்வு மறையும் அந்த நாள் எந்த நாளோ?

——(o)——

'குழலிக்கு'

(மு. விமலாதேவி, நெல்லிக்குப்பம்)

தங்கை பூங்குழலிக்கு,

அண்ணன் இளங்கோவன் வரையும் அஞ்சல். ஏனே சின்னுட்களாக உரையே காணவில்லை. யான் மனம் நெகிழ்வுற்றேன். நிலைமை என்னே! உள்ளம் தெளிவு பெறச்செய்.

சகோதரி சென்ற அஞ்சலில் நம்மவர்களின் நிலைபற்றி ஐயம் எழுப்பினுய்; இயம்புகிறேன் கவனம்வை. நம்மவர்களின் வாழ்க்கைத்தரத்தை சீர்தூக்கினுல் காணப்படுவது சேரும் சகதியுமே யல்லாமல் சிறப்படைந்த வாழ்க்கை காணுவதரிது. வாழ்க்கை என்ருல் கானில்வாழ் கொடும் விலங்கினம்முதல் விஞ்ஞான ரீதியாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஜீவ அணுக்கள்வரை, அரசன் முதல் ஆண்டி வரை, தோட்டி முதல் தொண்டைமான் வரை எல்லோரும் நடாத்துவதும் வாழ்க்கைதான் என்ருலும் வாழ்க்கையில் தாரதம்மியம் என்று ஒன்று உண்டல்லவா? அதைத்தான் குறிப்பிடுகிறேன் சகோதரி!

சிலரிடம் கலைமகள் வாசம்செய்யும் அதே நேரத்தில் லட்சுமி வற்றிப்போயிருப்பாள். லட்சுமி தாண்டவமாடும் அதே நேரத்தில் கலைமகள் குடியேற மறந்துபோயிருப்பாள். ஆனுல், இவை இரண்டுமே போதிய அளவில் இல்லாமல் மிகவும் சீர்கேடான நிலைமையில் உள்ளவர்கள் யாரென்ருல், அவர்கள் தான் நம்மவர்களாகிய "மீனவர்கள்" என்னும் பெயரால் அழைக்கப்படும் இந்நாட்டின் பிற்போக்கான பூர்வீக சந்ததிகள்.

நாம் ஏன் இந்த நிலையில் உள்ளோம்? எக்காலமும் இப்படித்தான் இருப்போமா என்பதைச் சற்றேனும் சிந்தித்ததுண்டா? மேனுட்டிலே வசிக்கும் நம்மவர்களின் நிலைமையும் இந்நாட்டில் வசிக்கும் நம்மவர்களின் நிலைமையும் ஒப்பிட்டுப்பார் குழலி. அந்நிய நாடுகளில் இத்தொழில் மூலம் உருவான தனக்காரர்கள் அநேகம். அவ்விடங்களில் இத்தொழில் மிகப்பெருமையுடன் சமூகங்களில் பேறுபெறுகிறது. ஆனுல் நம் நாட்டிலோ இத்தொழில் இழி தொழிலாக மதிக்கப்படுகிறது என்பதைக் கண்ணீர்விட்டு மன வருத்தத்துடன் கூறுகிறேன். ஆகையினுல்தான் நம் நாட்டில் இத்தொழிலை நம்பியுள்ள மக்கள் முன்னுக்கு வராமலே சீரழிந்துவருகின்றனர் நம் நாடு கொஞ்சம் கொஞ்சமாகத்தானே முன்னேற வேண்டும் என்று சிற்சில காரண காரியங்களோடு ஒப்புவமை காட்டுகிருர்கள். உண்மைதான். ஆனுல், அதே நேரத்தில் நம்மவர்களின் உண்மை நிலையும் ஆமை வேகத்திலாவது உயர்ந்துபட்டிருக்கவேண்டும். உயர்ந்ததா? இல்லை. காரணம், நம்மவர் நிலை உயரவேண்டுமானுல் பாதிப் பங்கு அரசியலாருடையது மற்றது நம்முடையது. ஆபத்தான நிலையில் நாம் இப்பொழுது இருக்கிரேம். தங்களாலியன்ற உதவியை அயலார்கள் நமக்குக் கொடுக்க முன் வருகிருர்கள். ஆனுல், அந்த உதவியை பயன்தரத்தக்கதாக நாம் தானேசெய்து கொள்ளவேண்டும். ஆனுல், அந்தவித உதவியே கிடைக்காவிட்டால்! காணக்கிடைக்காத கதலிக்கனி காலணுவுக்கு நான்கு எனின், உரித்தது இரண்டு, ஒருவேலை மிச்சம் என்று நினைக்கும் சோம்பேறிக்கு ஒத்தவர்களாகிவிடுவோம். ஆகவே, நம்முடைய பாதிப்பங்கை நாமேதான் செயலாற்றிக் கொள்ள வேண்டும்.

நிற்க, குழலி நம்முடைய மனைகளில் நம்மவர்கள் பெற்ற சிறுர்கள் முன்னுக்குவர வாய்ப்பில்லே. எவ்வளவுக்கெவ்வளவு படித்தவர்கள் உள்ளனரோ அவ்வளவுக்கவ்வளவு அந்தப் பிரிவினர் முன்னுக்கு வரமுடியும். எப்படியெனில் தங்கள் பலம் ஒன்றினுல் மட்டும் எல்லாவற்றையும் சாதித்துவிடலாமென்ற மனப்பான்மை படித்தவர்களுக்கு ஏற்படுகிறது அல்லவா! அதைப்போன்ற உணர்ச்சிதான் 1883-ல் ஏற்பட்டு படித்த அறிவாளிகள் பலர் தாங்களேகூடி ஸ்ரீ ஆனந்தமோஹன்போஸ் தலைமையில் அகில இந்திய தேசிய மாநாடு என்ற கூட்டத்தை ஏற்படுத்தினுர்கள் என்று காங்கிரஸ் புரட்சி சரித்திரத்தில் கண்டோம். ஆகவே, நம்மவர்கள் முன்னேற வேண்டுமானுல் நம்மிடையே பல படித்தவர்கள் தோன்றவேண்டும். கல்வியென்ற ஒரு அமுதம் ஒரு சிலருக்குத்தான் கிடைக்கும். அது அவர்களுக்குத்தான் உரிமை. அதை வேறு எவராலும் கைப்பற்ற முடியாதென்று நினைக்கிறுர்கள். தவறு, குழலி வேண்டுமானுல் உன்னுடைய குழந்தையைப் படிக்கவைத்துப்பார். நமக்குப் படிக்கவேண்டிய சலுகைகள் ஓரளவு கிடைத்திருக்கிறதென்பதை மறந்துவிடாதே. நம் குடும்பங்களில் வளர்ப்புத் திறனும் சுகாதாரமும் சூழ்நிலேயும் தான் சரியில்லே. ஆனுல், அவைகள் இனி பண்பட்டுவிடும் என்பதை நினைவுறுத்திக்கொள்வோம், நம்மிடையே படித்தவர்கள் மிகக்குறைவு. விரல்விட்டு எண்ணுமளவுக்கு உள்ளனர் என்பதை முன்ஒரு பர்வதவர்த்தனியில் எனக்குப் படித்துக் காண்பித்தாய். என் செய்வது? நாம் கல்வியில் முன்னேறினுல் நம்முடைய குலமும் முன்னேறும். காந்தியின் எண்ணப்படி கலப்பு மணங்கள் அதிகரிக்கும். கொள்வன கொடுப்பன அதிகமாகும், சாதிகள் தொலேயும், உயர்வு தாழ்வு புதையும், சமநீதி உருவாகும், சமதர்மம் நிலவும், பொதுவுடைமை புன்னகைசெய்யும், சீர்திருத்தம் சிறந்தோங்கும், காந்தீயம் மலரும்.

நம்மைப்போன்ற ஏமாளிகளின் கூட்டத்தில் அனேகர் வம்பளப்பார்கள். வாய்வீச்சு வீசுவார்கள். காரியம் சாதிக்கக் காலேப் பிடிப்பார்கள். (கண்கூடாகத் தேர்தலில் கண்டோம்) ஆகா! அமெரிக்காவைப்பார், ரஷ்யாவைப்பார் என்றெல்லாம் மேடைமேல் அலறுவார்கள். ஜீவகாருண்யத்தைப் பற்றி மணிக்கணக்கில் போதிப்பார்கள். அதே நேரத்தில் அவரது உடம்பில் பல ஆயிரம் பட்டுப்பூச்சிகளேக் கொன்று அதனுலான பட்டுச்சட்டை தென்றலில் சிலுசிலுக்க நமக்கு ஹரிகதாகாலட்சேபம் அயராது செய்து கொண்டிருப்பார். காந்தி மதுபானக்கடை வள்ளலார் புலால் மார்க்கெட் என்பதுபோல.

நமக்கு நாட்டின் வெளிநடப்பு, ருசிகரத் தகவல்கள், அரசியல் நிகழ்ச்சிகள் தெரிய வேண்டியதுதான். இதற்காக நாம் 'கிணற்றுத் தவளே' போன்று இருக்கக்கூடாதுதான். என்றுலும் தற்கால இளேஞர்களிடம் அரசியல் அரட்டை மலிந்துவிட்டது.

ஆகவே பூங்குழலி! உன்னுடைய பிள்ளைகளை, இந்நாட்டு மன்னர்களை, அறிவுக் களஞ்சியங்களை இனியாவது கல்விச்சாலைக்கு அனுப்பி கல்வியை அவர்களுக்கு அடிமையாக்கு. கல்வியைக் கண்டு பயப்படச் செய்யாதே. அப்படிப் பயந்தால் அவர்கள் கல்விக்கு அடிமையாகி விடுவார்கள். அயல்நாட்டுத் தொழில் திறனும் கல்வி வசதியும் உனக்குத்தெரியும். ஆகவே பன்முறை கூறுகிறேன். இனியாவது பிள்ளைகளை ஈடேற வழிசெய் சகோதரி. காத்திருப் பேன் பதில்காண!

—o—

கடமையும் காதலும்

(புலிசை - திரு. மொ. நாராயணன்)

களம் 9

இடம் :—காடு

காலம் :—நடுநிசி

இருப்போர் :—பிரதாப் மனோகர் பிரபாகர் உஷா.

[பிரதாப் அடிக்கும் அம்பு பிரபாகர் பக்கத்தில் வந்து குத்துதல். இது கண்டு கோபம் கொண்ட பிரபாகர் அம்புடன் பிர தாபிடம் ஓடி வருதல்.]

பிர :—என்ன மனோகர்? ஏன் பேசாமல் நிற்கிறாய்? என்ன நேர்ந்தது?

பிர :—ஒன்றும் நேர்ந்து விடவில்லை. சற்று மிஞ்சி இருந்தால் இந்த அம்பு என் உயிரை ருசிபார்த்திருக்கும். அதுவும் போதா தென்று அவனையும் அம்பு எய்யச் சொல்கிறாய்? அம்பு எய் வதற்கும் ஓர் அளவு இல்லையோ? உனக்கு அம்பு எய்யத் தெரியுமா முதலில். மடையனே!

பிர :—ஏது வர வர வார்த்தை வரம்பைத் தாண்டுகிறது?

பிர :—வரம்பைத் தாண்டவில்லையே துள்ளித்தானே குதிக் கிறது.

பிர :—வேடிக்கை போதும்.

பிர :—அப்படியென்றால் உன் வீரத்தைக்காட்டு?

[இதற்கிடையில் உஷா வருதல். அது கண்ட மனோகர் அவளிடத் தில் தன் மனதைப் பறிகொடுத்தல். அவளும் மனோ கரையே பார்த்தல். இது நிற்க பிரதாபும் பிரபாகரும் சண்டை இடுதல்.]

பிர :—சிறுவனே இப்பொழுது என்ன சொல்லுகிறாய்?

பிர :—இந்தச் சிங்கம் எதற்கும் அஞ்சாது?

பிர :—இந்தச் சிறுத்தையும் அப்படித்தான்.

[இதற்கிடையில் உஷா புலிவருகிறது எனக்கத்துதல். உஷாவைக் காப்பாற்ற பிரபாகர் ஓடிவருதல்.]

[பிரபாகரை இழுத்துக்கொண்டு ஓடுதல். பிரதாப் எழுந்து மனோகரிடம் வருதல்.]

ம:—என்ன பிரதாப்! அந்தச் சிறுவன் மிக அற்புதமாகச் சண்டைசெய்கிறான்.

பிர:—மனோகர் அதுசரி. நீ என்ன செய்துகொண்டிருந்தாய்?

ம:—நானா? அந்த பெண்ணிடத்திலேயே என் மனதைப் பரிகொடுத்துவிட்டேன்.

பிர:– என்ன பெண்ணா?

ம:—ஆமாம் பிரதாப்! அந்தச் சிங்கத்தின் தங்கை. குளிர் மதிக்கு ஒப்பானது அவள் கொள்மதி, அகன்று விரிந்த நெற்றி, அவள் ஒளிபொருந்திய முகத்தில் உலவுகின்ற வாளனைய கண்களைச் சொல்வேனோ? மற்றைய அங்கங்களின் மாண்பைச் சொல்வேனோ? மங்கையின் நலங்களைக்கண்டு மனம் திகைப்பதல்லால் அவை சொல்லும் தகையனவோ? அன்றியும் நீ சென்று அந்நலங்களைக் காண்பாயாதலின் நான் சொல்வதும் மிகையன்றோ?

பிர:—(சிரித்த வண்ணம்) இன்னும் இருக்கிறதோ?

ம:—இருக்கிறது.

பிர:—அப்படியென்றால் சொல் கொஞ்சம்; காதுகுளிரக் கேட்கின்றேன். ஹூம்..........

ம:—அம்மங்கையின் நுதலை வில்லென்றாலும், விழியை வேலென்றாலும், பல்லை முத்தென்றாலும், இதழைப் பவழமென்றாலும் சொல் ஒக்குமேயன்றிப் பொருள் ஒவ்வாது. ஒப்புவமை இல்லா அவ்வங்க நலங்களுக்கு உவமையும் சொல்ல இயலுமோ?

பிர:—(கேலியாக) இயலாவிட்டால் போதும்.

களம் 10

இடம்:—குடிசை வீடு.

காலம்:—இரவு.

இருப்போர்:—சோமுநாத், பிரபாகர், உஷா.

[பிரபாகர் உஷா இருவரும் ஓடிவருதல். சோமுநாத் அமர்ந்திருத்தல்,]

உ:—(இறைத்தல்) அப்பா! அப்பா.

சோ:—என்னம்மா விஷயம்? என்ன விஷயம்?-

உ:—அதோ அண்ணன் வருகிறது அதையே கேளுங்கள் அப்பா?

சோ:—என்ன நடந்தது? நீ தான் சொல்லேம்மா?

[இதற்குள் பிரபாகர் விருவிருப்பாக இறைப்புடன் வருதல். அவனிடம் சோமுநாத்.]

சோ :—டேய் பிரபாகர். காலையிலே போயி, இப்பவரீங்களே எங்கடா போயிட்டு வந்தீங்க இவ்வளவு நேரம்? உஷா நீயும் சொல்லமாட்ட? டேய் பிரபாகர் நீயும் சொல்லமாட்டாயோ?

பிர :—சொல்லுகிறேன் அப்பா! நானும் தங்கையும் காட்டிற்கு இயற்கைக் காட்சிகளைப் பார்க்கச் சென்றோம். அங்கே இருவீரர்களில் ஒருவன் என்னிடம் சண்டைக்கு வந்துவிட்டான். சண்டை மும்முரமாக நடந்தது அப்பா.

சோ :—பின்பு.

உ :—உடனே புலிவருகிறது என்று பொய்கூறி அண்ணனை அழைத்து வந்துவிட்டேனப்பா. அதுமட்டுமல்ல, அங்கு ஓர் ஆண் உருவம் என்னையே ரசித்துக்கொண்டிருந்தது அதை நானும் ரசித்தேன். ஆனால்

சோ :—ஆனால் என்ன நடக்கும் தெரியுமா? இந்த மூன்றெழுத்து (கா-த-ல்) உலகத்தையே ஆட்டிவைக்கும். நானும் உன் அம்மாவும் காதல் திருமணம் செய்துகொண்டதினால் தான் இந்த விளைவு, இன்றேல் உல்லாச உப்பரிகையில் வாழலாம் நாங்கள்.

உ :—(ஆச்சரியத்துடன்) என்ன!

சோ :—ஆச்சரியப்படாதே. சில சமயம் வெற்றியும் அடையலாம் தோல்வியும் அடையலாம் இந்தக் காதலிலே. ஏதோ சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டேன், இனி உன் இஷ்டம், வெற்றி கண்டால் எனக்கும் சந்தோஷம் தான். தோல்வி கண்டால் சகிக்கமுடியாது நம்மால். நன்றாக சிந்தித்துப்பார். வருகிறேன் உஷா.

[சோமுநாத்தும், பிரபாகரும் போதல், உஷா விசனத்தோடு அமர்ந்து இருத்தல்.]

களம் 11

இடம் :—குடிசை வீடு.
காலம் :—இரவு.
இருப்போர் :—உஷா.

[உஷா தனிமையில் விசனத்துடன் பாட்டு பாடிக்கொண்டிருக்கிறாள்.]

சோ :—உஷா! இன்னுமா படுக்கைக்குப் போகவில்லை.

உ :—தூக்கம் வரவில்லை அப்பா.

சோ :—இனிமேல்தான் தூக்கம் வராது. மறந்துவிடு உஷா உன் காதலனை,

உ :—எப்படியப்பா மறப்பது?

சோ :—முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டதை போலத்தான் உன் கதி.

[உஷா தன் தகப்பனின்மேல் சாய்ந்து அழுதல். அதற்கு சோமுநாத்,]

சோ :—அழாதே உஷா அழாதே. படுக்கைக்குப்போய் நிம் மதியாய்த் தூங்கு. கலா பார்த்தால் கோபப்படுவாள் உஷா. போ போ.

[உஷா படுக்கைக்குப்போதல். சோமுநாத்தும் போதல்.]

களம் 12

இடம் ;—அரண்மனே.

காலம் ;—காலே.

இருப்போர் :—அரசன், குமாரி, மனேகர், பொது மக்கள், சேவகன்.

[அரசன் சிம்மாசனத்தில் வீற்றிருக்கிருன். அருகில் அவன் மகள் குமாரியும் வீற்றிருக்கிருள். அப்பொழுது சேவகன் வருகிருன்.]

சேவகன் :—அரசே! யாரோ தங்களேக்காண வந்துள்ளனர்?

அரசன் :—எவ்வாறு உள்ளோர்?

சே :—கல்வி அறிந்த உள்ளம், மலேகளே ஒத்த புஜங்கள், அழகான முகம் இவைகள் அணேத்தும் நிறைந்த ஓர் வாலிபன்.

அ :—வாலிபஞ! சரி வரச்சொல்?

[சேவகன் வெளியேசென்று மனேகரை அழைத்து வருகிருன். அரசனேக் கண்ட மனேகர்.]

மனேகர் :—வணக்கம்! அரசே! வணக்கம்!

அ :—தாங்கள் யார்?

ம :—அன்பும் பண்பும் அறிவும் ஆற்றலும் நிறைந்த ஓர் மனிதப் பிறவியின் நண்பன். அக்குணங்களில் ஓரளவு எனக்கு உண்டு. என் பெயர் மனேகர்.

அ :—வேடிக்கையாகப் பேசுகின்றீர். தாங்கள் எதற்காக இங்கு வந்துள்ளீர்?

ம :—பாழடைந்த நகரத்தை நிர்மாணம் செய்வதற்காகத் தங்களிடம் வரி வசூலிக்க வந்தேன் அரசே!

அ:—கேள்விப்பட்டுள்ளேன் அந்த நகரத்தைப் பற்றி. ஆனல் கண்டதில்லே. நானும் அதற்குத்தான் ஓரளவு முயற்சிசெய்து வருகிறேன்.

ம:—ஒத்துழைப்பு சரியாக இருக்கிறது அரசே! அப்படியானல் தாங்கள் ....,..

அ:-அதைப்பற்றிக் கவலைப்படவேண்டாம், நீங்கள் இங்குக் கொஞ்ச நாள் தங்கவேண்டும்,

ம:—ஆகட்டும் அரசே அதற்கென்ன, தங்களிஷ்டம்,

அ:—சரி, வாருங்கள் தாங்களுக்கு வசதிகள் செய்துதரச் சொல்லுகிறேன்,

ம:—அப்படியே அரசே!

[அரசன் போகின்முன், அவன் பின்னல் மனேகர், குமாரி செல்லுகின்றனர், கூட்டம் கலைந்துபோதல்,]

——(o)——

கவிதை உள்ளம்

(வெ. ந. ஷன்முக சுந்தரர்-சென்னை—2.)

ஞாயிறும் திங்களும் தாளங்கள்; பரந்த கடலோசையோ அதில் பிறக்கும் ஒலி; வானமண்டலமோ மத்தளம்; அடர்ந்த மேகத்தினிடையே தோன்றும் அதிரிடி அதன் ஓசை; முரலும் கருவண்டொலி, வசந்தம் மருவும் தென்றலின் குரல், குழைவினில் கலந்து கொஞ்சும் சாரங்கள், பளிச்சிடும் தாரகைகள் பாடிடும் மொழியின் வார்த்தைகள்! ஆம்; அவன் கண்ட இயற்கை இதுவே! மற்றவர்கள் அவனை இயற்கைப் பித்தன் என்ருர்கள். ஒரு சிலர் அவனைச் சித்தம் கலங்கியவன் என்ருர்கள்! அவன் வணங்கிய இயற்கைத் தாயோ, எனக்குப் பிறந்த நல்ல மகன் அவன்தான் என்று மகிழ்ந்தது. அவனே பெண்ணில் இயற்கையின் பொலிவு கண்டான். அழகின் எல்லை கண்டான். அதிலே இன்பமும் கண்டான்! அதன் விளைவு...அவன் கவிஞன் ஆனன். அவன் இதயத்திலேயிருந்து கவிதைகள் பிறந்தன.

மலைச்சிகரத்தின் மாளிகையிலே ஏறிநின்று எட்டிப் பார்த்த பரிதி மேற்றிசையில் வழுக்கி விழுந்து விட்டான்! இந்த வேடிக்கையைப் பார்த்துக் கொண்டே வந்த அவன் எதிரே ஏரி குறுக்கிட்டது. சட்டென்று அவன் பார்வை வெள்ளம் ஏரிக்கரையில் பாய்ந்தது. அங்கே நீர் மொண்டு கொண்டிருந்த அணங்கு ஒருத்தி அவனைக் கண்டாள். அவன் நிலையைக் கண்டு 'களுக்' கென்று சிரித்தாள்! அவன் உள்ளம் காவிய உள்ளம் ஆயிற்றே! இயற்கையின் எழிலை அவள் சிரிப்பிலேயே கண்டான். அவனுக்கும் அவள் உலகமானள். அவளுக்கும் தான் அவன் உலகமானன்!

பொறிகளை யொடுக்கிப் பொய் தீரொழுக்க நெறி நின்றவரே பெண் பிறவியினல் வழி தவறுகின்றனர் என்ருல், சிற்றின்பத்தில் சிக்குண்ட இக்கவிதை எம்மாத்திரம்? அவன் பாடுவான், அவள் சிரிப்பாள். தேன் உண்ட வண்டாவான் அவன்! ஆம், அவர்கள் வாழ்வே கவிதை வாழ்வாய் ஆனது. வானமும் வளர்மதியும்,

கடலும் கதிரவனும், சோலேயும் மலருமே அவனது அகத்தைக் கவர்ந்தனவாகக் காணப்பட்டான். அந்த அன்பிற்கு அவளும் அரு கதையாகி விட்டாள். இரு கருத்துக்களும் ஒருமித்தன. இனி இணே பிரிவதில்லேயென இன்பக்கோட்டையைக் கட்டினர். ஆனல்......

காதற்பயிரிடையே களே முளேத்தது. அந்தக்களே தான் அவ் வூர் இளங்காளேயான ஜமீன்தார். பணம் படைத்தவன் என்ற ஆணவக்காரன். காய் கனியாகட்டும் என்று காத்திருந்தவன் போல இருந்தான். இப்பொழுதோ காய் கனியாகி விட்டது. காரிகை விஷயத்தில் கவனத்தைச் செலுத்திஞன். ஒருநாள் இரவு காரிருள் கானகத்தைக் கவர்ந்திருந்தது. தோப்பில் நுழைந்து குடி சையை அடைந்தான். காலடி சப்தத்தால் திடுக்கிட்டு எழுந்த மங்கையின் தந்தை விளக்கொடு வெளியே வந்தான். விளக்கின் சிற்றெளியால் ஜமீன்தார் என்று தெரிந்தான். பாம்பைக் கண்டு தவளே பதுங்குவதுபோலப் பதுங்கினுள். உள்நுழையும் அவனே வழிமறிக்கமுடியவில்லே. தடுத்திருந்தால் மற்றொரு நாளேக்குத் தண்டிக்கப் படுவான். சத்தம் போட்டால் அவன் செத்துப்போக வேண்டியது தான்! காரணம்......? அப்பணத்திமிருடையான் பண் ணேயில் பாடுபடுபவன். வேலேயை இழந்து வாடி மடிய வேண் டியது தான்.

குடிசையினுள் குமரியின் கூச்சல்! வெளியில் இருக்கும் குடி யானவனின் குலே நடுங்கியது. பாவம்...என்ன செய்வான். அப் பாவையால் அவனிடமிருந்து தன்னேப் பாதுகாக்க முடியாமற் போய்விட்டது. சுவைத்து எறியப்பட்ட கனியாளுள் குமரி.

இயற்கைப் பித்தனேக் காணவும் அவள் நாணங்கொண்டாள். வேலே குறையவில்லே, வருவதற்குச் சமயம் வாய்க்கவில்லே என்று அவனேச் சந்திக்கும் போதெல்லாம் சாக்குகளேச் சொல்லி அவனேத் தவிர்க்கலாளுள். முகர்ந்ததும் அணிச்சம் அகம் குழைவது போல, அவனேக் கண்டால் அவளது முகாரவிந்தத்தில் என்றுமில்லா அந்தகாரம் சூழ்ந்து கொள்ளும்! புலியைக் கண்டதும் புள்ளிமான் புதரில் புகுவது போல அவனேக் கண்டதும் மின்னி மறையும். மின்னல் வேகத்தில் மறைந்து விடுவாள் அவள். நாட்கள் நடந் தன. அதிர்ச்சியால் ஆட்டமுற்ற அவள் அகத்தில் அமைதி அகன்று விட்டது. மதுவையருந்திய பின் மலரை வண்டு மறக்கும். ஆனல், மதுவுண்ட வண்டை வேண்டாமென மலர் மறுக்கிறதா? கரு மேகங்களேக் கண்டதும் கலாபத்தை விரித்துக் களிப்புற்று மயி லாடுகிறது. கதிரவனேக் கண்டதும் கமலங்கள் களிப்படைய வில்லேயா? கதிரவனேக் கண்டு களிப்புறும் கமலங்கள் சந்திரனேக் கண்டதும் சந்தோஷிக்கின்றனவா? அஃறிணேப் பொருள்களே கற்பை அலட்சியம் செய்யவில்லே என்ருல் ஆறறிவு படைத்த அரிவையின் போக்கு என்னென்பது......!

அதிகாரத்தால் ஒன்றை அடைவதை விட அன்பால் அடை வதே மேம்பாடல்லவா? ஆகவே, 'விருப்பமில்லா மங்கையிடம்

வீண் வாதம் ஏன் ? தன்னால் ஒருவருக்குத் தாங்கமுடியாக் கஷ்டம் உண்டாவதா ? என்ற எண்ணத்தால் விலகிக் கொண்டான் அவனும்! சேல் விழியோடு நாள் போக்கும் சோலைச் சொர்க்கத்தை மறந்தான். முன்போல் சிறந்த கற்பனைகளை அவனால் காணமுடியவில்லை. சுடர் விளக்காயினும் தூண்டுகோலொன்று வேண்டுமல்லவா ? அது போல, கற்பனைக் கரையைத் தாவிப் பிடிக்கத் தத்தளித்தபோது காரிகையாள் கைகொடுத்தாள். இப்பொழுது அந்த ஆதரவுதான் இல்லையே. பாவையாளின் பாசம் இவ்வாறு பாதி நாளில் பட்டுப் போகுமென அவன் பகற்கனவும் கண்டதில்லை. சதிபதியாய் இருந்த சத்தியவான் சாவித்திரியைப் பிறிக்கக் காலதேவன் சதியினும் இது பெரிதாகக் காணப்பட்டது. என் செய்வான் ? மங்கையை மறந்து மன அமைதி கொள்ள இயன்ற வரையில் முயன்றான்; முடியாமற் போய்விட்டது.

உண்மையை உணராத உலகம் அன்று அவனையும் அவளையும் பற்றி உளறிற்று. பிரிந்த பின்பும் பிற்போக்கான சமூகம் 'சாந்தியுற்றதா ? அது தானே இல்லை. மாசற்ற காதலை ரசித்த அவன் மனம் அவளை மகத்துவமாகவே நினைத்ததால் எங்கு வாழ்ந்தால் என்ன ? அவள் இதனினும் இனிதான வாழ்க்கையில் இன்புற்றிருக்க, அருளும் இறைவா !' என்று அவன் கவிதா உள்ளம் கடவுளிடம் கண்ணீர் விட்டுக் கதறிற்று.

அவளாலும் அவனை மறக்கமுடியவில்லை. இருப்பினும், காலில் முள் தைத்தபின் நடப்பது கடினம். அந்த முள்ளை அகற்றி விட்டால் தான் கஷ்டமின்றி காலூன்றி நடக்கலாம் என்ற கருத்து அவள் கவனத்தைக் கவர்ந்தது. கடைசியில் ஒரு முடிவுக்கு வந்ததாகக் களித்தாள். உடனே அவனிடம் மடந்தை விரைந்து நடந்தாள். முகிற்றுகில் முக்காடிட்ட முழுமதி முக மலர்ச்சியோடு நீல வானில் உலாவிக் கொண்டிருந்தது. அவ்வொளியால் முல்லைக் கொடி புத்தாடை பூண்டு ஆனந்தத்தில் ஆழ்ந்திருந்தது. ஏன் ? சராசரமே சந்திரோதயத்தில் மயங்கி இருந்தது. ஆனால், அவன் மட்டும் ஆழ்ந்த யோசனையில் ஆழ்ந்திருந்தான். அப்பொழுது, கோடைகாலத்து மாரிபோல் அக்கோதையாள் அங்குத் தோன்றினாள். ஆச்சரியத்தால் மூர்ச்சித்தவன் போல் செயலற்று நின்றான். ஏன், உணர்ச்சியற்ற உருவமா ? என்றாள். அவன் 'கண்ணே !' என்றான். அவள் 'கண்ணாளா !' என்றாள். உடனே ஆடவனின் பார்வை அவளது மலர்க்கண்ணில் பாயுமுன், 'வாருங்கள்' என்றாள். எழுந்தான்; பசுத்தோல் போர்த்த புலியின் பின் செம்மறி செல்வது போல அவனும் அவள் பின் சென்றான்.

இருவரும் அடைந்தனர் அவளது சிறுகுடிலை. அவனைக் கயிர் கட்டிலின் மேல் அமரச்செய்து கனிரச மொழிகளைப் புகன்று, கிண்ணமொன்றை அவனிடம் நீட்டினாள். பாவம்! பாலுக்கும் நஞ்சுக்கும் வேற்றுமை காண முடியாதவன் அல்ல 'அவன்'. அவனுக்கு எல்லாம் தெரியும்! பாலுக்கும் நஞ்சுக்கும் பேதமறியா,

மதலை கொடுப்பதைத் தடுக்காமல் குடிப்பது போல அவனும் குடித்தான். தன் காரியத்தை முடித்தோமே என்று அவள் மனங்களித்தாள். உண்மையில் தான் உண்டது நஞ்சு என்று உணர்ந்ததும், அவள் உள்ளம் நோக ஒன்றும் உரைக்கவில்லை. எழுந்தான். 'வருகிறேன்,' என்று சொல்லி விரைந்தான் வெளியே. குமரியின் உள்ளம் குறுகுறுத்தது.

'நஞ்சைக் கொடுத்த நய வஞ்சகக்காரி!, என்று வசைச் சொற்களால் வாழ்த்தியிருக்கலாம். கேட்டால் அவள் வாழ்க்கை கெட்டு விடும் என்று எண்ணினான். ஏனென்றால், மென் மொழியாளின் இதயம் மெல்லியது. வேதனையைத் தாங்க வலிமையற்றது. அவள் வாழ்க்கைக்குப் பயன்படா என் வாழ்க்கை இருந்தென்ன? இல்லாமல் இருப்பது நலம். இதை அறிந்தே அணைத்து ஆலிங்கனம் செய்த அதே கையால் முற்றுப்புள்ளியிட்டாள் என எண்ணினான். 'கருணையில் சிறந்த கடவுளே! 'அவளை' மன்னித்துவிடு என்று அவன் கவிதை உள்ளம்' காதல் நெஞ்சம் குமறியது; மன்றாடியது; என்வரையில் அவள் ஒன்றும் அறியாதவள்; மங்கையை நீதான் மன்னிக்கவேண்டும் என்றான். தள்ளாடிக் கொண்டே தையலாள் குடிலைவிட்டு வந்துவிட்டான். அன்று முதன் முதலாக அவளைச் சந்தித்த இடத்தை அடைந்தான். அதற்குமேல் அவ்விடத்தை விட்டு அகல அவனால் இயலாமற் போய்விட்டது. கண்கள் சோர்ந்தன. அவனது இதழ்கள் கருகிப்போயின. உடலும் சில்லிட்டது. இதயத்துடிப்பு இரட்டித்தது. நாடி வேகம் நான்கு மடங்காயிற்று. பின்பு விழுந்துகொண்டே வந்தது. கடைசியாக 'கண்ணே! அங்கு காண்கிறேன், நீ நல்வாழ்வில் நிலைப்பாயாக! என்று கூறிக் கொண்டே கீழே விழுந்தான். உள்ளத்தை உருக்கும் உன்னத உணர்ச்சிகளை ஊட்டுபவன் உணர்ச்சியற்றுக் கீழே விழுந்திறந்தான், அதே கணத்தில் அவளும் நஞ்சுண்டு இறந்தாள்.

அழகும மணமும் உள்ள மலர் சோலையோடு இருக்கும்போது அனைவர்க்கும் இன்பமூட்டும். அது வாடிப்போனால் யாருக்குப் பயன்? பயனுள்ள அந்த மலரை வாடும்படியாக விடலாமா? அதற்கு நீர் வார்ப்பது மக்களின் கடனல்லவா!

——(o)——

யார் பெற்ற செல்வம்!

திரு. M. A. C. பச்சையப்பா, கும்பகோணம்.

(சிவலோகபுரம், கண்மணி விலாஸ்)

21-வது சீன்

(கோவிந்தன் வீடு)

(கோவிந்தன், மைத்துனன் ரங்கநாதன், லக்ஷ்மி மூவரும் இருத்தல்.)

லக்ஷ்மி :—அண்ணு! நம் குமாருக்குச் சிங்கப்பட்டிச் செல்வந்தர் செங்கல்வராய பக்தரின் பெண் பர்வதாவை நிச்சயதார்த்தம் செய்துவிட்டு, முகூர்த்த தேதியும் குறிப்பிட்டுவிட்டு வந்தோமே... அந்த பர்வதாவைப் பார்த்தால் நம்ப கண்மணி மாதிரி, இருக்குல்ல ?

ரங்கநாதன் :—ஆமாம்மா ! நான்கூட கொஞ்ச நேரம் வரையில் ரொம்ப யோசனை செய்துவிட்டேம்மா !

கோவி :—உண்மைதான் மாப்பிளே! நம்ப லக்ஷ்மி சொல்ற மாதிரி பலதடவை அந்தப் பர்வதாவை உற்று உற்றுக் கவனித்தேன். நம் கண்மணியோ என்னமோன்னு! ம்......இன்னேரம், கண்மணி இருந்தா இந்தப் பர்வதா மாதிரிதானிருக்கும். நம்ப குமாருக்குக் கல்யாணம் செய்துவைத்துக் கண்குளிரக் காண்போமல்லவா ?

ரங்க :—இப்பத்தான் என்ன அத்தான். இந்தப் பர்வதாவை, நம்ப கண்மணி தான்னு நினைச்சுக்கிட்டாப் போவுது. ஏன்னு இனிமே, நம்ப வீட்டுக்குத்தானே வரப்போகிருள்.

கோவி :—நீ ஒன்னு மாப்பிளே ! அது, யார் பெற்ற செல்வம் ? நாம்ப நம்ப கண்மணின்னு உரிமை கொண்டாட ? ம்.......... அந்தச் செல்வந்தர் பொண்ணு இந்தப் பர்வதா, இல்லியா லக்ஷ்மி ?

ரங்க :—என்ன அத்தான், அப்படிச் சொல்லிவிட்டீர்கள் ? இனிமே அந்தச் செல்வந்தர் பெண் பர்வதாவை நம்ப குமாருக்குக் கல்யாணமானதும் உங்களுடைய செல்வந்தானே அது. எனக்கு மறு செல்வம்! இல்லையா லக்ஷிமி !

லக்ஷ்மி :—ஆமண்ணு ! எங்களுக்கு மக ! உங்களுக்கு மருமக ! ம்...... செல்வந்தர் வீட்டுப் பெண்ணல்லவா ? செல்வமாகத்தான் வளர்த்திருப்பார்கள்.

கோவி :—ம்............. பிறத்தியார் வீட்டு பெண்ணைப் போற்றி புகழுறோம். நம்ப பெண் கண்மணியின் கதி, என்ன வாயிற்றோ ? தெரியலே !

ரங்க :—கவலையை மறந்து நிம்மதியாக இருப்பதைக் கிளறிவிடுகிறீர்களே அத்தான். கண்மணிக்கு ஒரு ஆபத்தும் ஏற்பட்டிருக்காது பாருங்களேன். எங்கயாவது சுகமாயிருக்கும்.

கோவி :—ம் ...... எல்லாத்துக்கும். அண்ணுமலையானிருக்கான் போங்க ! (என்று சொல்லியபடி, வேலைக்காரனை கூப்பிடுதல்)

கோவி;—எலே வீசம்படி. டேய் வீசம்படி !

வீசம்படி :—கூப்பிட்டிங்களா எஜமான் ?

கோவி :—ஆமாடா ! இந்தா, இதிலுள்ளபடி பிரிண்ட்டு பண்ண அச்சாபீஸுக்குக் கொடுக்கச் சொல்லு.

வீசம் :—....... இதேமாதிரியே நம்ப குமாரய்யாகிட்டே சொல்லி கொடுத்திடுறேங்க !

„ இதோ, இப்பவே போய் ....

கோவி :—(சிரித்தபடி) ஏண்டாப்பா, நாளை மறுதினம் கொடுக்கலாமுன்னு ....

வீசம் :—திட்டம் போடவில்லை எஜமான்.! நானு ரொம்ப கிட்டத்திலேயிருக்கும் போது எப்படி நடந்து கொள்ளுனுமுன்னு நல்லா தெரியுங்க எனக்கு.

கோவி :—சரி சரி, போடா. போய் கொடுத்திட்டு வா!

வீசம் :—ஆகட்டும் எஜமான். (திரும்புதல்)

ரங்க :—பொல்லாப்பய அத்தான் இந்த வீசம்படி.

வீசம் :—(திரும்பி) நல்லா சொல்லுங்க, நானு வேண்டாங் கறேன்.

22-வது சீன்

(நளினு வீடு)

(ராஜாவும், நளினுவும் பாடுதல். பாடி முடிந்ததும், கையில் ஓர் கல்யாண பத்திரிகையுடன் மோகன் அங்கு வருதல்.)

நளினு :—......,. வா மோகன். எங்கே காலையிலிருந்து காணோம்? ஊர் பூரா சுற்றி அலைந்து கலைத்துப்போய் வருகிறீர் கள்?

ராஜா :—(குறுக்கிட்டு) நம் மோகனின் புரோக்ரும் உனக்கும் எனக்கும் எங்கே தெரியப்போகுது நளினு! ஏதாவது ஒரு திட்டத் துடன் சுத்திக்கிட்டுதான் வந்திருப்பார். ம்... இப்படி உட்காரும் பிரதர்!

மோகன் :—...... (உட்கார்ந்தபடி) வெறிகுட் அயிடியா பிரதர். தேங்க்யூ. எல்லாம் உங்கக் காரியமாத்தான் ரொம்ப மெனக் கெட்டேன். இதோ பாருங்கள்.

(தன் கையிலிருந்த கல்யாணப் பத்திரிகையை நீட்டுதல்)

நளினு :—......... மிஸ்டர் ராஜா, உங்கள் மாமா பெண் பர்வதாவுக்கும் நம்ப ஆண்டு விழாவிலே தலைமை வகித்தாரே குமார் அவர்களுக்கும் வருகிற வெள்ளிக்கிழமை திருமணமாம். அழைப்பிதழ் இது!

மோகன் .... ஆமாம் .... உங்க மாமா அந்தப்பெண் பர்வ தாவைத் தங்களுக்காகவே அருமையாக வளர்த்து வந்தாராமே?

ராஜா :—........ தள்ளுங்க பிரதர்! ஊர் பேர் தெரியாத ஓர் பெண்ணை எடுத்து வளர்த்து என் தலையில் கட்டப் பார்த்தார் கள். என்ன நளினு? அனுதையைப் போய் நான் கல்யாணம் செய்துகொள்வதா? அன்பே! உன்னைவிடவா அவள் ......

நளினு :—.... அழகு மட்டும்மிருந்துவிட்டால் போதுமா? அன்பு என்பது இருந்தாலும், பண்புள்ளவளாக, இருக்கவேண் டாமா? உங்கள் மேல் அளவுக் கடந்த பிரியம் உள்ள அப்

பெண்ணை உதாரணமாய் பேசுவது அழகல்ல அன்பரே! மேலும் தாங்கள் இருவரும் ஒன்ருக ஆடிப்பாடி ஓடி விளையாடியிருப்பீர்களே. ஆமாம்.... திடீரென்று தித்திக்கும் செங்கரும்பை ஒடித் தெரியும்படி ஏற்படக் காரணம்? ராஜா, நிலையில்லாக் கிளையை வளைத்துக்கொண்டு, வளமடையும் வாழ்க்கையை உதறிவிடலாமா?

மோகன் :— .... (குறுக்கிட்டு) இதெல்லாம் செயற்கை நளினு! கண்ணிருந்தும் கபோதியான கதையாகிவிட்டது. ராஜாவின் செயற்கை! ம்... மனிதத் தன்மையில் மனமாற்றம் ஏற்படுவது இயற்கைதானே. இல்லையா பிரதர்?

நளினு :— ....இயற்கையால் ஏற்படும் சூழ்வினைக்கு ஓர் கன்னிகையை கைவிட்டது தப்பல்லவா?

மோகன் :— .... பரவாயில்லை நளினு! ராஜாவுக்காக ரெக்கமெண்ட்டேஷன் ஸ்ட்ராங்கா செய்றீயா?

ராஜா :— .... ம்......... அவ்வளவுதானு? அப்புறம்?

நளினு :— .... இல்லே மோகன்! நம்ப ராஜா ரொம்பபீல் பண்ணுருங்கறத்துக்காக ஸ்லைட்டா இருக்கட்டுமென்று சொன்னேன்!

ராஜா :— .... (நிமிர்ந்து உட்கார்ந்து) வெறிகுட் நளினு! இது இருக்கட்டும். அந்த குமார் பயலை உன் வலையில் மாட்ட வைக்காமல் இருக்கிருயே?

நளினு :— .... பொருப்பில்லை யென்று ....

ராஜா :— ....பிதற்றவில்லை யென்கிருயே?

மோகன் :— .... அது விஷயமாகத்தான், சிவலோகபுரம் போய் வந்தேன் ராஜா!

நளினு :— ....பாருங்களேன் இன்னும் ஒன் வீக்லே அந்தக் குமார் எங்கிருக்கான்னு.

மோகன் :— .... ஆமாம் ஸார், அந்தக் கவலை எங்களுடையதல்லவா?

நளினு :— ....சரி சரி வாருங்கள் நாழியாகுது.

23-வது சீன்

(சிவலோகபுரம் கண்மணி விலாஸ். கோவிந்தன் வீடு)

(கல்யாண சீன்)

(குமாரும் பார்வதாவும் கல்யாண கோலத்திலிருக்குதல். செல்வந்தர் குடும்பத்தாரும், கோவிந்தன் குடும்பத்தாரும் கலியாணத்திற்கு வருவோர் போவோர்களை வறவேற்பளித்த வண்ணமிருக்குதல்)

தம்பதிகளின் அருகில், வேலைக்காரன் டல்லு, வேலைக்காரி டல்லு, செல்வந்தர், பங்கஜம், கோவிந்தன், ரங்கனுதன், லக்ஷிமி, விசம்படி, மயிலு கணக்கப்பிள்ளை கதிர்வேலு, மானேஜர் கணக ராஜ்! சாது ஒருவர் மற்றும், தொழிலாளர்கள் இருக்கின்றனர்.

புரோகிதர் ஓமகுண்டம் வளர்த்தி நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருர். கொட்டுமேளம் முழங்குகிறது. புரோகிதர் குமாரன் கையில் தாலியை எடுத்துக் கொடுத்து பர்வதா கழுத்தில் கட்டப்போக, தாலி நழுவி கீழே விழுந்து விடுகையில் அங்கு வந்திருந்த சாது ஒருவரைத் தவிர மற்றவர் எவருக்கும் தெரியாது சாது ஜாடை காட்ட கீழே விழுந்த தாலியை எடுத்துப் பர்வதாவின் கழுத்தில் கட்டுகிருன்.

பின்னர் நளினு தேவியாரின் டான்ஸிுடன், திருமணம் இனிது முடிகிறது. [தொடரும்]

---(o)---

திருக்குறள்

வித்வான் K. N.

14-ம் அதிகாரம்

ஒழுக்கமுடைமை

அஃதாவது தங்கள் தங்கள் நிலைக்குச் சொல்லப்பட்ட ஆசாரத்தை (ஒழுக்கத்தை) யுடையவராய் இருக்கையாம். இது மனம், வாக்கு, காயம் முதலானவை அடங்கினவர்க் கல்லது முடியாதாதலின் அடக்கமுடைமையின் வைக்கப்பட்டது.

திருவள்ளுவர்

1. ஆசாரமானது உயர்ந்தோர், இழந்தவர் எல்லோர்க்கும் சிறப்பைக் கொடுத்தால், அவ்வாசாரமானது உயிரைக் காட்டிலும் அதிகமாகக் காப்பாற்றப்படும்.

ஒருவனுக்கு உயிரைப் போல் சிறந்தது யாதொரு பொருளும் இல்லையாயினும் அவ்வுயிர் நல்வினைக்கும் தீவினைக்கும் காரணமாய் நின்று இன்ப துன்பங்களை ஏற்றுக் கொள்ளுகிறது. ஒழுக்கமோ அவ்வாறு ஆகாமல் இன்பத்தை உண்டாக்குவதற்கே காரணமாய் இருத்தலால் உயிரைக் காட்டிலும் காப்பாற்றப்படும் என்ருர்.

2. பல அறங்களையும் ஆராய்ந்து இவற்றின் இம்மை மறுமை இரண்டிற்கும் துணையாவது எதுவென்று மனத்தை அடக்கி அறிந்

தாலும், துணையாய் முடிவது அவ்வாசாரமே ஆதலால் ஆசாரத்தை ஒன்றாலும் அழிவு படாமல் பேணி, வருந்தியும் காக்கக் கடவன்.

இவை இரண்டு பாட்டாலும் ஆசாரத்தின் சிறப்பு கூறப்பட்டது.

3. எல்லோரும் தங்கள் தங்கள் வருணத்திற்கு ஏற்ற ஆசாரமுடைமையானது குலமுடைமையாம்; அவ்வாசாரத்தினின்றும் தவறுதலானது தாழ்ந்த வருணமாய்விடும்.

குலம் என்பது குடிச்சிறப்பு. ஒருவர் பிறந்த சாதியில் தாழ்ந்த குலத்தாராயினும் ஒழுக்கமுடையவரா யிருந்தால் உயர்ந்த குலத்தாராவர் என்றும், ஒருவர் உயர்ந்த சாதியில் பிறந்தவராயிருந்தாலும் ஒழுக்கத்தினின்றும் தவறினால் தாழ்ந்த சாதியராய் விடுவாரென்றும் பெறப்படும்.

4. ஒரு பிராமணன் தான் கற்ற வேதத்தை மறந்தானாயின் அதனால் வருணங் கெடாமையினால் பின்னும் அதனை ஓதிக்கொள்ளலாம்; பிராமணனது உயர்ந்த வருணமானது ஆசாரங் குறைய கெட்டுவிடும்.

இதனால் கற்ற வேதத்தை மறக்கக் கூடாதென்பதும் மறந்தால் இழிகுலத்தானாய் விடுவானென்பதும் பெறப் படுகிறது.

5. பொறாமையுடைய வனிடத்துச் செல்வம் நில்லாமை போன்று ஆசாரமில்லாதவனிடத்து உயர்ச்சியானது இல்லை.

'கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதும் உண்பதும் இன்றிக்கெடும்' என்ற உவமையை எடுத்தாள்வதால் ஆசாரமில்லாதவன் சுற்றத்தாருக்கும் உயர்ச்சி இல்லை என்பது பெறப்படுகிறது. உயர்வு என்பது உயர்குலம்.

6. தவறுதலாய் இழிகுலமாதலை குற்றம் உண்டாதலைத் தெரிந்து மனவலிமை யுடையோர் செய்வதற்கு அருமை நோக்கி ஆசாரத்தில் சுருங்கார்.

மனவலிமையாதலை தாம் கொண்ட விரதத்தினை விடாமலிருத்தல். அதாவது இன்ன தருமம் செய்வேன் இன்ன பாவம் செய்யாமலிருப்பேன் எனத் தாம் ஏற்படுத்திக் கொள்ளுதல்.

7. எல்லோரும் ஆசாரத்தினாலே மேன்மையை அடைவார்; ஆசாரத்திலிருந்து தவறுதலாலே தாம்அடைவதற்கு உரித்தல்லாத பழியை அடைவார்.

பகையால் அடாத பழியைப் பிறர் சொல்லியவிடத்து அதனையும் பொருந்தும் என்று உலகம் கொள்ளும் ஆதலால் அடைவதற்கு உரித்தல்லாத பழியை அடைவர் என்றார்.

இவை ஐந்து பாட்டாலும் ஆசாரமுள்ள விடத்து உண்டாகும் குணமும், ஆசாரமில்லாத விடத்து உண்டாகும் குற்றமும் கூறப்பட்டது.

8. ஒருவனுக்கு ஆசாரமானது அறத்துக்குக் காரணமாகும்; தீய ஆசாரமானது இம்மையிலும் மறுமையிலும் துன்பத்தைக் கொடுக்கும்.

ஆசாரமானது அறத்துக்குக்காரணம் என்று சொல்லப்பட்டதால் தீய ஆசாரம் பாவத்துக்குக் காரணம் என்பதும், தீய ஆசாரம் இம்மையிலும் மறுமையிலும் துன்பத்தைக் கொடுக்கும் என்றதால் நல்ல ஆசாரமானது இம்மையிலும் மறுமையிலும் இன்பத்தைக் கொடுக்கும் என்பதும் பெறப்பட்டது. இதனால் மறுமையின் விளைவு கூறப்பட்டது.

9. மறந்தேனும் தீய சொற்களைத் தம் வாயினாற் சொல்லுதல் ஆசாரமுடையவர்க்கு முடியாவாம்.

தீய சொற்களாவன பொய் முதலியனவும், வருணத்திற்கு உரிய அல்லனவுமாம். இக்குறளினால் ஒழுக்கமுடையவர் மறந்து சொல்லினும் பிறர்க்கு நன்மையை உண்டாக்கும் சொற்களையே சொல்லுவரென்பது பெறப்படுகின்றது.

10. உயர்ந்தோரோடு பொருந்த நடத்தலைக் கல்லாதவர் பல நூல்களையும் கற்றாராயினும் அறிவில்லாதவர்.

உயர்ந்தோரோடு பொருந்த நடத்தலாவது அவரெப்படி நடந்தாரோ அப்படி நடத்தல். அறநூலிலே சொல்லப்பட்டவைகளில் இக்காலத்துக்குப் பொருந்தாதவைகளைத் தழுவிக்கொள்ளல் வேண்டும். கல்விக்குப் பயன் அறிவும், அறிவுக்குப் பயன் ஒழுக்கமும் ஆதலால் ஒழுக்கத்தைக் கல்லாதவர் பல நூற்களைக் கற்றும் அறிவில்லாதவரே யாவர்.

இவை இரண்டு பாட்டாலும் சொல்லாலும் செயலாலும் வரும் ஒழுக்கங்களெல்லாம் தொகுத்துச் சொல்லப்பட்டன.

தூது கோஷ்டி

(27—11—1957) புதன்கிழமை மாலை 3 மணிக்கு முதல் அமைச்சர் கனம், K. காமராஜ் நாடார் அவர்களையும் ஸ்ரீமதி லூர்து அம்மாள் சைமன் அவர்களையும் உயர்திருவாளர்கள் V. M. நடேச நாட்டார், K. நடேச நாட்டார், N. ராமய்யா B.A, V. கன்னியப்ப நாட்டார் முதலியவர்கள் பேட்டிகண்டு மீனவர் குறைகளையும் 1958-ம் ஆண்டுக்கு மீனவர் சொசைட்டிகளுக்குக் குத்தகை தரும் விஷயமாகவும் விண்ணப்பித்துக் கொண்டார்கள். 1957-ம் ஆண்டு நிர்வாக அறிக்கை வெளி வந்ததும் அரசாங்கத்துக்குள்ள லாப நஷ்டங்களைப் பரிசீலித்து உத்தரவு அனுப்புவதாக முதல் மந்திரியாரும், இவ்விஷயத்தில் தம்மாலியன்ற உதவி செய்வதாக கனம் லூர்து அம்மாள் சைமன் அவர்களும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டார்கள்.

இன்பவாழ்க்கை

கற்பு

தமிழ்ப்புலவர் சிவ. முருகசிவம்
(75, நைனியப்பன் தெரு, சென்னை-1)

கற்பு என்பது ஆண் பாலார்க்கும் பெண்பாலார்க்கும் பொது வானதாகும். ஆனால் சிறப்பாக கற்பென்பது பெண் மக்களிடத்திலுள்ள உயர்வாகிய சிறந்த குணமெனப்படும். பெண் மக்களிடத்திலுள்ள பல குணங்களுள் தனக்கும் பிறருக்கும் நன்மை பயக்கக் கூடிய குணத்தைக் கையாளுவதையே கற்பு என்று வரையறுத்தார்கள்.

கற்பு என்பதற்குப் பொருள் யாதெனில் தாய் தந்தை முதலியோரிடத்தில் கற்றுக் கொள்ளுவதாகும். அப்படிக் கற்றுக் கொண்டு புருஷனிடத்தில் மாறுபாடில்லாமல் அவன் சொல்லிய படி செய்வதாகும். அதையே ஔவையார் கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை என்று கூறினார்கள்.

"சிறுகாலை யட்டில்புக லருத்தியுறச்
சமைத்தல்சுவை திருத்தி யூட்டல்
மறுகாலை யெண்ணாது விருந்தழைத்தல்
மகப்பெறுதல் மடநா ணச்சம்
பெறுகாலை யின்புறுதல் முன்னுறங்கப்
பின்னுறங்கல் பின்னெ ழாதல்
உறுகாலை தொழு தெழுதல் பன்னிரண்டுங்
கற்புடையார்க் குறிய செய்கை"

மேலும் இந்தச் செய்யுளில் கூறியபடி கற்புடைய பெண்களுக்குப் பன்னிரண்டு செய்கைகளும் தவறாமல் பொருந்தி இருக்க வேண்டும்.

1. காலை நேரத்திலேயே சமையலறைக்குச் சென்று விரைவில் சமைக்கச் சித்தமாகுதல்.

2. ஆசையோடு திருந்துவன திருத்திச் சமைக்க முற்படல்.

3. சமைத்த கறி வர்க்கங்களில் உப்பு, காரம், புளி முதலியது குறைந்தால் அதற்கு வேண்டிய யளவு சேர்த்துச் சாப்பிடச் செய்தல்.

4. நாளை பின்னை யென்று சொல்லாது வந்த விருந்தினர்களை அவ்வப்போது உபசரித்தல்.

5. கற்புடைய பெண்களுக்கு மகப்பேறு ஆணும் பெண்ணுமாக கலந்து புத்திர பாக்கியமிருத்தல்.

6. தனக்கு எவ்வளவு தெரிந்திருந்தாலும் புருஷன் முன்னிலையில் ஒன்றும் தெரியாதவள் போல மடமையாக இருத்தல்.

7. வெட்கப்பட வேண்டிய சொல்லுக்கும் செயலுக்கும் நாணி இருத்தல்.

8. தனக்கு எவ்வளவு தைரியம் இருந்தாலும் பெரியவர்கள் என்ன சொல்லுவார்களோ என்று அஞ்சுதல்.

9. பயிர்ப்பு, அந்நியர் ஸ்பரிசம் படும்போது தேகம் தானுகவே சுளித்துக் கொள்ளுதலாகிய குணங்களால் உண்டாகும் பெருமையால் இன்புற்றிருத்தல். மடம், நாணம், அச்சமென்று கூறியதால் பயிர்ப்பும் அதனோடு சேரும். ஆக நாற்குணமும் நாற்படையாகையால் இங்கு அதனைச் சேர்த்துப் பொருள் கொண்டோம்.

10. புருஷன் துயிலும் வரையிலும் பணிவிடை புரிந்து பின் நித்திரை செய்தல்.

11. அப்படி உறங்கின பின்னர் தன் புருஷர் விழிப்பதற்கு முன் விழித்தல்.

12. எழுந்திருக்கும் போதே கடவுளையும் தன் கணவனையும் தொழுது எழுந்திருத்தல், ஆகிய இந்தப் பன்னிரண்டு குணங்கள் அமைந்திருக்க வேண்டுமென்பர்.

மேலும் தாயைப்போல அன்பும், வேலைக்காரியைப்போல பணியாற்றும் இயல்பும் லட்சுமியைப் போல அழகும் எதைச் செய்தாலும் பொறுத்துக் கொள்ளும் குணமும், புருஷன் விரும்பும் போது லஜ்ஜை யில்லாமல் இன்பம் நுகர்தலும், நல்ல சமயங்களில் மந்திரிகளைப் போல விளக்கிச் சொல்லும் நுண்ணறிவும் இருக்க வேண்டுமென்பது கற்பிற்கு இன்றியமையாததாகும்.

அன்றியும் புருஷனுடைய சுகதுக்கங்களில் தானும் பங்கு எடுத்துக் கொண்டு ஈடுபட்டு, சுகமனுபவிக்கும் போது இன்பமும் துன்பம் அனுபவிக்கும் போது துன்பமும் அனுபவிக்க வேண்டும். புருஷன் நோய்வாய்ப் பட்டு பலமும் அழகும் குறைந்தாலும் குறைபாடாக எண்ணுமல் திருப்திகரமாக வாழ்க்கையை நடத்துவதே கற்பென்றும், கற்பின் லட்சணங்களில் சிறுது விரித்துச் சுருக்கமாகத் தொடர்ந்து ஆராய்வாமென நிறுத்துகிறேன்.

ஏனோ இச்சமூகம் (அல்லது) இச்சமூகம் எதற்கு? (அல்லது) இச்சமூகம் வேண்டுமா ?

(திரு. இளங்கண்ணன், கடலூர்.)

பள்ளிக்கூடம் பலதரப்பட்ட இனத்தினர் படிக்கின்றனர். அறிவு நிரம்பி அப்பள்ளிக்கு பொதுவாக ஒரு நல்லப் பெயரை வாங்கித் தருகிறார்கள். அஃதேபோல் தான் சமூகம். அதில் பல பிரிவினர் இருந்தாலும், பலரும் ஒன்றுபட்டு ஊக்கத்துடன் உழைத்து சமூகம் முன்னேற்றமுற செய்யவேண்டும். அன்றுதான் சமூகத்தின் மாண்பு மதிப்பிற்குரியதாகவிருக்கும்.

2. நம் சமூகம் ஓர் பிற்போக்கான, அதுவும் இழிவுப்பட்ட தோர் சமூகமெனவேச் சொல்லலாம். இச்சமூகம் முன்னேற ஒவ் வொரு குலாபிமானியும் இது தன் கடமையென ஆக்கவேலைக்கு முன்வருதல்வேண்டும். தன் வேலையல்லவென ஒருபோழ்தும் தட் டிக்கழிக்கக்கூடாது. முன்னின்று உழைப்போனை யாரும் உதா சீனம் செய்யக்கூடாது, இனப்பத்திரிகையை மட்டும் படித்தால் போதாது. செயலில் ஈடுபடவேண்டியது மிகமிக அத்யாவசிய மானது. அன்றுதான் சமூகம் முன்னேறும்.

3. பொதுவாக நோக்கின், என்னை என்ன இனத்தான் என் பதறியார் என்னுடன் பழகும் யாவரும் இனத்தவரை முடிந்த யளவு தலைத்தூக்கிவிட செயலில் ஈடுபட்டதால் ஒரு சிறு பாலருக்கேமட்டும் தெரியும். செயலில் ஈடுபட்ட சமயத்தில் நானறிந்த உண்மையை கீழே தருகின்றேன்.

ஒருநாள் நம்மவர் இருப்பிடத்திற்கு செல்லுங்கால் என் நண்ப ரொருவர் (நான் இந்த இனத்தவன் தான் என்பது அவருக்குத் தெரியாது.) " சார்! தாங்கள் அங்கே ஏன் செல்லுகின்றீர்கள்? அது செம்படத்தெருவாச்சே " என்று ஒரு ஏளனச் சிரிப்போடு கேட்க, அதற்கு என்ன பதில் சொல்லுவதென்று புரியாது சந்தர்ப் பத்திற்கேற்ற பதிலொன்றைச் சொல்லி அவர் பிடியிலிருந்து விலகி விட்டேன். நானும் அந்த இனத்தவன் என்று அந்நிலையில் சொல் லிக்கொள்ள உண்மையில் விரும்பவில்லை. காரணம் அவ்வளவு இழிவுநிலைமையிலிருக்கும் நம்மக்களையும், நம் சமூகத்தையும் எண் ணியே!

4. இம்மாதிரி ஓர் அவலநிலையிலிருக்கும் ஓரினம் முன்னேறா மலிருந்தால், அதன் பெயரை இன்னும் சொல்லிக் கொள்ள நாண மாய்த் தானிருக்கிறது. ஆதலால் நீங்களே சொல்லுங்கள் இப்பேர் பட்ட இழிவுப்பட்ட ஓர்சமூகம் நமக்கு வேண்டுமா? அல்லது சாதியின் பெயரைக் கேட்டவுடனே மனக்கசப்படையும் இதர சாதியினருடன் மானத்தை விற்று இனிமேலும் வாழாது, அவர் களைவிட நாம் உயர்ந்தவர்களே என்று உணர்த்தும் வண்ணம் பாடுபட்டு முன்னுக்கு கொண்டுவந்து நன்மதிப்புடன் திகழும் புத் துயிர்ப்பெற்ற சமூகம் வேண்டுமா?

5. ஆதலால் நம்மின மக்கள் என்றென்றும் திருந்தாரென வும், இச்சமூகம் ஒரு போழ்தும் முன்னேறாது எனவும் கொண் டுள்ள நோக்கங்களை தகர்த்தெறிய, இச்சமூகத்தின் பலதரப்பட் டோரும் முனைந்து இன்றே ஆக்க வேலையிலீடுபட யாவரையும் பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றேன். பலன் கண்டிப்பாக கிட்டுமென்பதில் கிஞ்சித்தேனும் ஐயமில்லை.

6. முன்னேற்ற பாதையில் வெற்றிபெறும் நாள் எந்நாளோ! அந்நாள் இச்சமூகத்தினர் கணிக்கும் குறுகிய காலத்து நன்னாளாக விருக்க விழைகின்றேன்.

(குறிப்பு:—படிப்போர் யாவரும் தயவு செய்து கோபங் கொள்ளற்க.)

187258

Regd. No. M. 6835 Parvathavarthani November '57.



BUY ALWAYS

OUR
BEST
QUALITY

FINE & DELICIOUS
TO DRINK

COFFEE
RAW, ROAST & GROUND

OUR SCENTED NUTS—A SPECIALITY

Sawmy's Coffee Mfg., Co.,
262, NETAJI SUBHAS CHANDRA BOSE ROAD, MADRAS-1.
PHONE No. 3687.

ஸ்ரீ கணேஷ்ராம்ஸ்

777 மார்க்

அசல் ஆப்பீல், திராக்ஷ, மாதுளம், மாம்பழம்,
பழரசங்களினுல் மெஷினில் தயார் செய்த
புரூட் ஸ்குவாஷ் (FRUIT SQUASHS)ம்,
ரெடிமிக்சர் ரவா தோசை பவுடரும்,
அப்பளம், வடாம், எல்லாவகை வற்றல்களும்
எங்களிடத்தில் கிடைக்கும்.

ஸ்ரீ கணேஷ்ராம்ஸ் & கோ.
ஸ்ரீ ராமபவான் பில்டிங்ஸ்
46, தம்புசெட்டி தெரு :: மதராஸ்-1.

Editor, Printer, Publisher: Sri V. M. Natesam, Goodland & Co.,
55, Muthumari Chetty Street, Madras-1,